Registered as a NewsPaper


விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–32 | 16 –08–2004 | திங்கட்கிழமை | ஓசை –180



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V. பந்தல் சேவை
முல்லைசாலை
தருமபுரம்.
விநாயகர் வீதி,
மயிலிட்டி.
(சி-9956)

## வட,கிழக்கு புறம்பான நிர்வாகமானால் பம்பலப்பிட்டி தமிழரின் நிலை என்ன

### கேள்வி கேட்கிறது ஜே.வி.பி

நாடு பிளவுபட்டால் மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகள் ஏற்படுமென விவசாய அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் மிகவும் புத்தி சாதுரியமாக வாழுகின்ற நிலைக்கு இலங்கை மக்கள் உள்ளாகியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கை பிரித்து நிர்வாகம் ஒன்று செயற்படுமானால் கொழும்பின் வெள்ளவத்தை பம்பலப்பிட்டிய போன்ற இடங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இ.த.அ.சபைபற்றி தேவையற்ற விமர்சனம் வேண்டாமென்கிறார் சனாதிபதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக தற்பொழுது புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை தேவை இல்லாமல் விமர்சனம் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். தேவையற்ற பிரச்சாரங்கள் மேற்கொள்வதையும் உடன் நிறுத்தும் படி அரசாங்க அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சனாதிபதி இந்த விசேட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

# நாட்டின் அபிவிருத்திக்கான திட்டம் என்ன?

# உதவி வழங்க உலகவங்கி நிபந்தனை!

## இலங்கையின் பொருளாதார நிலை குறித்து பா.உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிக்கை

(கொழும்பு)

**“இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவோம்” என்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசின் திட்டத்தை நிராகரித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்கான திட்டம் என்ன என்பதை வெளிப்படுத்தினாலேயே நிதியுதவி வழங்க முடியும் என உலக வங்கி நிபந்தனை விதித்துள்ளது.**

சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்துள்ள இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான அறிக்கையிலேயே இந்த நிபந்தனையை விதித்துள்ளது. அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்தின் போது முன்மொழியப்பட்ட, “இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவோம்” என்ற திட்டத்தில் காணப்படும் நன்மைகளையும் சுட்டிக்காட்டியுள்ள உலக வங்கி

அதனை தவிர்ப்பதனால் இலங்கையின் பொருளாதாரத்தை மீள் அமைக்கக்கூடிய திட்டம் எது என்பது தொடர்பாகவும் குறிப்பிட்ட அறிக்கையில் உலக வங்கி கேள்வி எழுப்பியுள்ளது.

அபிவிருத்திக்கான அரசின் வேலைத்திட்டங்கள் யாவும் முன்வைத்த பின்பே கடன் வழங்குவது சம்பந்தமாக ஆராயப்படும்.

தனியார் மயப்படுத்துதல் சமுர்த்தி வழங்கும் திட்டம் 30வீதம் மட்டுப்படுத்துதல், மின்சார இலாகா புனரமைத்தல் போன்றவைகளின் வேலைத்திட்டங்கள் குறித்தும் அரசின் நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டுமென உலக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 20 இலட். குடும்பங்கள் வரட்சியால் பாதிப்பு

### சமூக சேவைகள் அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் சுமார் 20 இலட்சம் குடும்பங்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக சிறிலங்காவின் சமூகசேவைகள் அமைச்சு கூறியுள்ளது.

இம்மக்களுக்கு நிவாரணம் வழங்க 66 கோடிரூபா தேவைப்படுகிறது என்றும் அமைச்சு செய்திக்குறிப்புக் கூறியுள்ளது.

இதேவேளை தற்பொழுது கடும் வரட்சி ஏற்பட்டுள்ள பிரதேசங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியக்கொடி ஏற்ற படையினர் போட்ட தடை மக்களால் முறியடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை-நிலாவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றுவதற்கு சிறிலங்கா கடற்படையினர் தடையை ஏற்படுத்த முற்பட்டபோதும் அது பொதுமக்களால் முறியடிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்ட போது அதனைத் தடுக்கும் அடாவடிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அடிப்படையிலான நகர்வாக இ.த.அ.சபையை கருதுவது தவறாகும்

### -அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

இடைக்கால தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்பிற்கான புலிகளின் யோசனைகளை அரசியல் அடிப்படையிலான நகர்வாகக் கருதுவது தவறாகும் என சு.ப.தமிழ்ச்செல்வன் தம்மைச் சந்தித்த ஆயர்குழுவிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகள் முன்வைத்துள்ள இந்த யோசனைகளின் அடிப்படையில் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலை தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான நடைமுறைகளுக்குரிய யோசனைகளை நாம் முன்வைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர்குழு–அரசியல் துறைப்பொறுப்பாளர் கிளிநொச்சியில் நேற்று சந்தித்துப் பேச்சு

### சமாதான முயற்சியை முன்னெடுப்பது குறித்து ஆராய்வு



கத்தோலிக்க ஆயர் குழுவினர் நேற்று பிற்பகல் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று பிற்பகல் 3.00 மணி முதல் 4.00 மணி வரை இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும், கத்தோலிக்க ஆயர் தரப்பில் பேராயர் அல்கம் ரஞ்சித், மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசெப் அடிகள், யாழ்.மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய செளந்தரநாயகம் அடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பினையடுத்து யாழ்.மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய செளந்தரநாயகம் அடிகள் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையில்,

***கேள்வி:– தற்போதுள்ள சூழ்நிலையில் நடைபெற்ற சந்திப்புக் குறித்து தெரிவிக்க முடியுமா?***

பதில் :-பேராயர் அல்கம் ரஞ்சித் அவர்கள் வத்திக்கானின் பிரதிநிதியாக இப்போது இந்தோனேசியாவில் பணிபுரிந்து வருகின்றார். அவர் இலங்கைக்கு வருகை தந்தபொழுது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துத் தளர்ந்துபோயுள்ள பேச்சுவார்த்தையினை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சகாக்களின் கைது குறித்து

## பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறையிட ஐ.தே.கட்சி முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள், முன்னைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களைக் காரணம் இன்றி அரசாங்கம் கைது செய்வது சம்பந்தமாக எதிர்ப்புத்தெரிவிப்பதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி பொலிஸ் ஆணைக்குழுத் தலைவரை சந்திப்பதற்கு ஐக்கிய தேசியக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் போராளிகளை தடுத்த படையினருடன் வாக்கு வாதம்!

(திருகோணமலை)

திருகோணமலை உவர் மலையில் நேற்று அரசியல் பணிகளுக்காக சென்ற மூன்று பெண் போராளிகளும், நான்கு ஆண்போராளிகளும் படையினரால் தடுக்கப்பட்டு ஆயுதங்கள் இருப்பதாக கூறி சோதனைக்கு உள்ளாக்கப்படவிருந்தனர். எனினும் விடயத்தை கேள்வியுற்ற அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டீசல் விநியோகம் இல்லாததால் தொடருந்து சேவைகள் பல நிறுத்தம்

டீசல் விநியோகம் இல்லாமையால் நகரங்களுக்கிடையிலான பயணிகள் தொடருந்து சேவைகள் நேற்று நள்ளிரவு வரை நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நகரங்களுக்கு இடையிலான சேவைகளை நிறுத்துவதன் மூலமே தூர இடங்களுக்கான தொடருந்து சேவைகளை நடத்தக்கூடியதாக இருப்பதாக தொடருந்து கட்டுப்பாட்டுமையம் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் 13 நகரங்களுக்கிடையிலான தொடருந்துகளின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதேநேரம் பேருந்து மற்றும் சிற்றுந்து சேவைகளும் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

## 5வருடங்களாக வேதனம் வழங்கப்படவில்லை கலகா, தெல் தோட்ட ஆசிரியர் கவலை

தோட்டப்புறப் பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடங்களை நீக்கும் வகையில் 1997 ஆண்டு தற்காலிகமாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கடந்த ஐந்து வருட வேதன நிலுவை வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 1997 ஆம் ஆண்டு தற்காலிக ஆசிரியர்களாக நியமனம் பெற்றஇவர்களுக்கு2003ஆம் ஆண்டில் நிரந்தரநியமனம் வழங்கப்பட்டது.

எனினும் அவர்களுக்கான 5 வருடவேதனக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

கண்டி மாவட்டத்தில சில கல்வி வலயங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள போதும், கலகா, தெல்தோட்ட போன்ற இடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு குறிப்பிட்டவேதன நிலுவைகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக கண்டி கல்வி வலய அதிகாரிகளிடம் வினவிய போது அரசியல் மாற்றங்களே இதற்கான காரணம் என கூறப்பட்டது.



மூன்றாவது ஆண்டில்
மேஜர்
நிலவனின்
நீங்கா நினைவுகள்

பூவாய் மலர்ந்தெங்கள்
வாசலில் சிரித்தாய்
புலியாய் நிமிர்ந்துந்தன்
உயிரினைச் சொரிந்தாய்
வருவாய் மீண்டுமெம்
அருகாய் என மெழுகாய்
அழுதோம் உன் நினைவாய்
மறையா வான் நிலவாய்
நிலவா!!
ஒளி தருவாய்

இரங்கசாமி மதுசங்கர்
குச்சவெளி - திருமலை.

மண் மகனாய் : 18. 09. 1972
மாவீரனாய் : 16. 08. 2001

---- குடும்பத்தினர் ----

(4964)



# வன்னி நெட் கபே
## Vanni Net Cafe

உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது



- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




# கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கார்த்திகேசு
# சொக்கலிங்கம்



தோற்றம்
19-11-1939

மறைவு
14-08-2004

ஐயப்பன் பக்தனாய் நாளும்அவனியில் அன்புப்பணிகள் காத்தீர்கள். ஐயங்கள் தீர்த்தெமக்கு அறிவுடன் ஆறுதல் சொல்லி நின்றீர்கள். வையகம் வாழ்த்திடும் சேவைகளால் வாழ்வாங்கு எம்முடன் வாழ்ந்தீர்கள் தெய்வீக நினைவுப் பொலிவுடன் சேவைவல்லானாய்த் திகழ்ந்தீர்கள்.

வன்னேரிக்குள ஐயப்பன் கோவிலில் வாஞ்சையுடன் ஐந்து வருடங்கள் எண்ணரிய தொண்டுகள் இயற்றியே எல்லோர் மனதிலும் இடம்பிடித்தீர்கள். பண்ணிசை, பஜனை, கோவில் பணிகளை பாங்குடன் பேணிவந்தீர்கள். விண்ணவர் உலகினில் நீங்களின்று விரைந்திட்ட மாயம் தானென்னோ?

ஆங்கிலப்புலமையும், கல்வியறிவும் அடைக்கலம் புகுந்திட்ட உத்தமர் நீங்களல்லவா? நீங்கிடாத்தெய்வீகப்பக்தியும் நிறைந்துவிளங்கும் பண்பாளர் நீங்களல்லவா? தீங்குகள் எண்ணாத தேசபக்தனாய் தேசத்தை காத்திடும் வீரரைத் தந்த தியாகபுருஷரல்லவா? ஏங்கிடவைத்தெம்மை பிரிந்து எங்கே சென்றீர்கள் சொக்கலிங்கம் ஐயா?

ஐயப்பன் தாளில் ஐயா சேர்ந்து வாழ இறைஞ்சுகிறோம்.

ஈழத்து சிதம்பரத்தை தன்னகத்தே கொண்டு இலங்கிடும் காரைநகர் வலந்தலையில் வாழ்வாங்கு வாழ்ந்த சொக்கலிங்கம் வையகம் விட்டேகி சென்றதனால் காலத்தால் இணைந்த எங்களின் கண்ணீர் அஞ்சலிக் காணிக்கை.

தங்களின் பிரிவால் துயருறும்
மணி ஐயப்பா நகை மாட
முகாமையாளரும், ஊழியர்களும்
யாழ் சாலை, கிளிநொச்சி.

தங்கள் இழப்பினால் தவிக்கும்
சிவனருட்செல்வன் அரிசி ஆலை
உரிமையாளரும், ஊழியர்களும்.
கரடிப்போக்கு,கிளிநொச்சி.


(சி-10074)

# ஐரோப்பா, ஆசியாவில் நிலைகொண்டுள்ள 70 ஆயிரம் இராணுவத்தை அமெரிக்கா வாபஸ்


### சனாதிபதி புஷ் தீர்மானம்

(வோஷிங்டன்)

**ஐரோப்பிய ஆசிய நாடுகளில் நிலை கொண்டுள்ள 70 ஆயிரம் இராணுவத்தைத் திரும்பப்பெறப் போவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.**



ஐரோப்பிய, ஆசியக் கண்டங்களில் அமெரிக்கா தனது இராணுவத்தை நிறுத்தி இருக்கிறது. ஐரோப்பாவில் 1இலட்சம் வீரர்கள் முகாமிட்டுள்ளனர். இதில் ஜேர்மனியில் மட்டும் 70 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். பசுபிக் கடல் பகுதியில் ஒரு இலட்சம் வீரர்களும், ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளில் 1 இலட்சம் வீரர்களும் இருக்கிறார்கள்.ஐரோப்பிய, ஆசியக் கண்டங்களில் இருக்கும் 70 ஆயிரம் வீரர்களை வாபஸ் பெற சனாதிபதி ஜோர்ஜ் புஷ் முடிவு செய்துள்ளார். வாபஸ் எப்போது இருக்கும் என்பது வெளியிடப்படவில்லை.



இஸ்ரேலிய துருப்பினரால் ஏவப்பட்ட கண்ணீர்ப்புகை டப்பாவை உதைக்கும் பலஸ்தீனிய இளைஞன். நப்லஸின் மேற்குக்கரை நகரில் சனிக்கிழமை (14ஆம் திகதி) இஸ்ரேலிய இராணுவம் வீடுவீடாகத் தேடுதல் நடாத்தியபோது இது நிகழ்ந்தது.



8.ஜப்பான் – டோக்கியோவின் யசுகுனி புனித இடத்தில் 2ஆம் உலகப் போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக நேற்று (15ஆம் திகதி) கூடிய மக்களின் குடைகள் கடல்போலக் காணப்படுகின்றன. 2ஆம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்ததன் 59ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றாகும்.

# பலஸ்தீன தீவிரவாதிகளைக் கண்காணிக்க நவீன சாதனங்களுடன் உளவு பார்க்கும் பலூன்கள்

### இஸ்ரேல் இராணுவம் அறிமுகம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பகுதியில் தீவிரவாதிகளின் ரொக்கெட் லொஞ்சர்களைக் கண்டுபிடித்து அழிப்பதற்காக நவீன சாதனங்கள் பொருத்திய உளவு பலூன்களை இஸ்ரேல் இராணுவம் பறக்கவிட்டுள்ளது.

இஸ்ரேல் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் தொடர்ந்து தற்கொலைப் படைத்தாக்குதலை நடத்தி வருகின்றனர். சில நேரங்களில் இஸ்ரேல் இராணுவ முகாம்கள் மீது ராக்கெட் குண்டுகளையும் வீசி நாசத்தை ஏற்படுத்தி வருகின்றனர். காஸாப்பகுதியில் ரொக்கெட் லொஞ்சர்கள் மூலம் அதிக அளவில தாக்குதல் நடைபெற்று வருவதால் அதைத் தடுக்க வேவு பார்க்கும் பலூன்களை இஸ்ரேல் இராணுவம் பறக்கவிட்டுள்ளது.

அதிநவீன கமராக்கள், டிரான்ஸ்மிட்டர்கள் மூலம் காஸாப் பகுதி முழுவதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ரொக்கெட் லொஞ்சர்கள இருப்பது தெரிந்தால் உடனடியாகத் தாக்கி அழிக்கப்படுகிறது. சமீபத்தில் கூட பலஸ்தீன தீவிரவாதிகள் நடத்த இருந்த ராக்கெட் தாக்குதல் பலூன் உதவியால் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவ அதிகாரி கர்னல் யோஸி தெரிவித்தார்.

ஒவ்வொரு பலூனும் 9கோடியே 20இலட்சம் ரூபாயாகும். இந்த ஆண்டு இறுதிக்குள் இதுபோல் 10 பலூன்களைப் பறக்கவிட இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது.

# ஷியா தீவிரவாதிகளுடனான சண்டை நிறுத்தப் பேச்சு தோல்வி


(பாக்தாத்)

ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் ஷியா பிரிவு தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க ஈராக் படைகளுக்கும் இடையே நடந்துவரும் சண்டையை நிறுத்த நடந்த பேச்சு நேற்று முன்தினம் முறிந்து போனது. இந்த தகவலை ஈராக் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் முவாபக் அல் ருபை சனிக்கிழமை தெரிவித்தார். ஈராக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அமைதித் தீர்வு காண மேற்கொண்ட முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கவில்லை. இரத்தம் சிந்தக் கூடாது. நகரில்பாதுகாப்பான நிலைமையை ஏற்படுத்தவேண்டும். ஆயுதங்களை தீவிரவாதிகள் ஒப்படைக்க வழி காணவேண்டும் என்பது நாங்கள் எதிர்பார்ப்பது என்றார் அல் ருபை. அரசு சார்பில் பேச்சுவார்த்தைக்கு தலைமை வகித்தவர் அல் ருபை. பேச்சு தோல்வி அடைய எது காரணமாக அமைந்தது என்பதை ருபை தெரிவிக்கவில்லை. பேச்சு முறிந்து போனதால் நஜாப் நகரிலிருந்து புறப்பட்டுச் செல்லப்போவதாக அவர் தெரிவித்தார்.பேச்சு முறிந்து போனதால் நாஜப் நகரில் அல் சாதார்மகதி தீவிரவாத குழுவுக்கும் கூட்டணிப் படையினருக்கும் இடையேயான சண்டை இனி கடுமையாகுமா என்பது தெரியவில்லை.

கடந்த 5 ஆம் திகதியிலிருந்தே சண்டை மூர்க்கத்தனமாக நடந்து வருகிறது. சண்டையை முடிவுக்கு கொண்டு வரபேச்சு தொடங்கியதை அடுத்த வெள்ளிக்கிழமை மோதல் நிறுத்தப்பட்டது. தமது தரப்பு கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை ஷியா பிரிவுத் தலைவர் முத்ததா அல் சாதர் வெள்ளிக்கிழமை ஒப்படைத்தார். நஜாப் நகர் மற்றும் புனிதம் மிக்கதாகக் கருதப்படும் இமாம் அலி மசூதியிலிருந்து தமது தரப்பு போராளிகளை விலக்கிக் கொள்ளவும் அயுத்தங்களை ஒப்படைக்கவும் ஈடாக நஜாப் நகரிலிருந்து அமெரிக்கப் படைகள் விலகவேண்டும். தமது தரப்பு போராளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளிக்க வேண்டும் என்பது அல்சாதர் விடுத்திருந்த கோரிக்கைகளில் சில.

# ஈராக் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபை உதவும்

### கொபிஅனான்



(நியூயோர்க்)

ஈராக்கில் நடைபெற்றுவரும் மோதல்களுக்கு ஒரு தீர்வைக் காண ஐக்கிய நாடுகள் சபை உதவும என்று அதன் பொதுச் செயலர் கொபிஅனான் உறுதிபடக் கூறியுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை மற்றும் அங்கு நடைபெற்றுவரும் இடைக்கால அரசுக்கு எதிராக சில உள்நாட்டு தீவிரவாத அமைப்புக்கள் போராடி வருகின்றன. இந்த அமைப்புக்கள் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு ஆதரவானவை. இந்நிலையில் ஈராக்கில் அமைதியான அரசியல் மாற்றத்தைக் கொண்டு வர உதவுவோம், ஈராக்கில் சட்டத்தின் ஆட்சி ஏற்பட வழி வகுப்போம என்று அனான் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அறிக்கையில் மேலும் அவர் கூறியிருப்பதாவது,

பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதையே ஐ.நா. எப்போதும் விரும்பும். பலப்பிரயோகம் என்பது கடைசி முயற்சியாக மட்டுமே இருக்க வேண்டும். ஈராக்கில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். ஈராக்கில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் வன்முறைச் சம்பவங்கள் மிகவும் வேதனை தருகின்றன. ஷியா பிரிவுத் தலைவர் மோக்டாடா அல்-சதார் மோசமான நிலையில் காயமுற்றிருப்பதை அறிந்து வருந்துகிறேன். குறிப்பாக புனித நகரமான நஜாப்பில் இத்தகைய வன்செயல்கள் நிகழ்வது ஏற்புடையதல்ல. அமைதியைக் கொண்டு வருவதற்கு தீவிரவாதத்தை ஒழிப்பது முக்கிய பணி. வன்முறைக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே சிறந்தவழி. ஈராக்கில் அமைதியான அரசியல் மாற்றம் நிகழ அனைத்துத் தரப்பு மக்களும் ஒத்துழைக்க வேண்டும். ஈராக்கியர்களுக்கு எவ்வகையிலும் உதவ ஐ.நா தயாராக இருக்கிறது என்று அனான் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அமெரிக்க போர் விமானங்கள் மூர்க்கத் தாக்குதல் ஈராக்கில் 93 பேர் பலி: பலர் படுகாயம்

(பாக்தாத்)


ஈராக்கில் உள்ள மேலும் 2 நகரங்கள் மீது அமெரிக்க விமானங்கள் திடீர்த் தாக்குதலில் 93 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டுமென வலியுறுத்தி இஸ்லாமிய தீவிரவாதிகள் கிளர்ச்சி செய்து வருகிறனர். அந்த தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகிறது.

கடந்த 9 நாட்களாக ஷியா இயக்க தீவிரவாதிகள் அதிகம் வசிக்கும் நஜாப் நகரில் தாக்குதல் நடந்தது. இதில் 300-இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். அங்கு அமெரிக்க இராணுவம் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகிறது. நேற்று எதிர்த் தாக்குதல் எதுவும் இல்லை. இதனால் அமைதி நிலவியது.

. இந்த நிலையில் நேற்று முன்தினம் பாக்தாத் அருகில் இருக்கும் சமாரா,ஹில்லா ஆகிய இரு நகரங்கள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியது. நள்ளிரவு 12 மணிக்குத் தொடங்கி பகல் வரையில் இந்தத் தாக்குதல் நீடித்தது.

விமானங்களில் சென்று சரமாரியாகக் குண்டுகள் வீசப்பட்டன. இதன்போது 500 பவுண்ட் (250 கிலோ)எடையுள்ள ஏராளமான குண்டுகள் போடப்பட்டன. இந்தக் குண்டு வீச்சில் பல அரச கட்டடங்கள், வீடுகள், கடைகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. நேற்று முன்தினம் ஒரேநாளில் அமெரிக்கா நடத்திய இவ்விரு தாக்குதல்களிலும் 93 பேர் இறந்துள்ளனர். சாவு எண்ணிக்கை மேலும உயரலாம் எனக் கூறப்படுகிறது.



இந்தியாவின் 58ஆவது சுதந்திரதினமான நேற்று (15ஆம் திகதி) செங்கோட்டையில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் இந்திய தேசியக் கொடியின் வர்ணங்களில் உடையணிந்த பள்ளிச்சிறுவர்கள்.

# தீவிரவாதத்தை ஒழிக்கும்வரை ஓயமாட்டோம்

### சுதந்திரதின உரையில் பாகிஸ்தான் பிரதமர்

பாகிஸ்தானில் தீவிரவாதத்தை முழுமையாக ஒழிப்போம். அதுவரை நாங்கள் ஓயமாட்டோம். என பாகிஸ்தான் சுதந்திர தினஉரையில் பிரதமர் சுஜத்உசேன் கூறினார். பாகிஸ்தான் சுதந்திரதின விழா, பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் மோசமான வானிலை காரணமாக இந்த விழா, மாநாட்டு மண்டபத்தில் நடந்தது. “பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகளாலும் வெளிநாட்டைச் சேர்ந்த அல்-ஹைதா தீவிரவாதிகளாலும் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து தீவிரவாதிகளை முறியடிப்போம். தீவிரவாதத்தை நசுக்குவோம்” இவ்வாறு முஷாரப் கூறினார்.

# அசம்பாவிதங்களைக் காரணம் காட்டி பொதுமக்கள் மீது படையினர் கெடுபிடி!

## மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களைக் காரணம் காட்டி சிறிலங்காப் படையினர் பொது மக்கள் மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகளைக் கண்டித்து மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி மற்றும் ப.அரியநேந்திரன் ஆகியோர் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதான விவகார அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.**

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில்; "தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் இருக்கிறது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவசியமேற்பட்டால் மட்டும் பொலிசார் மட்டுமே பொதுமக்களைச் சோதனையிட முடியும். ஆனால் இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் பொதுமக்கள் அச்சமும், பீதியும் அடைந்துள்ளனர். வாகனங்களில் செல்லும் பிரயாணிகள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர். குறிப்பாக பெண்களை ஆண் இராணுவத்தினரே சோதனையிடுவதால் பெண்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான இராணுவத்தின் சோதனை நடவடிக்கைகளால் மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பிரயாணிகள் ஆகியோர் குறிப்பிட்ட இடங்களிற்கு உரிய நேரத்திற்கு செல்லமுடியாது தவிக்கின்றனர்.

போர்க்காலத்தில் எவ்வாறு இராணுவக் கெடுபிடிகள் இருந்ததோ அதேபோலவே தற்போதும் உள்ளது. இவ்விடயத்தை சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் விடயமாகவே நாம் கருதுகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## எண்ணெய்த் தாங்கி விபத்தில் சேதம்

(முல்லைத்தீவு)

மீன் ஏற்றிச்செல்லும் கூலர் வாகனம் முல்லைத்தீவு சிலாவத்தையில் பாலத்துடன் மோதியதில் வாகனத்தின் எண்ணெய்த்தாங்கி உடைந்துள்ளது.எண்ணெய் முற்றாகவெளியேறியதால் வாகனம் ஓட முடியாது இடைநடுவில் நின்றது. (20)

## வைத்தியசாலைக் கிணற்றில் நீரின்றி நோயாளர் அவலம்!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் உள்ள கிணற்றில் நீர் அடிமட்டத்திற்குச் சென்றுள்ளதால் நோயாளர்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர்.

கழிப்பறைகளைத் துப்புரவு செய்தல், நோயாளர்கள் குளித்தல் என்பன பெரும் அவலத்துக்குரியதாகவே உள்ளது.

மகப்பேற்று விடுதிப்பக்கமாக ஓர் குழாய்க் கிணறு உள்ளது. இதனையே எல்லோரும் பயன்படுத்த வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இதுவும் திறந்த இடத்தில் உள்ளதால் அதுவும் நோயாளர்களுக்கு ஓர் அவலத்துக்குரிய விடயமாக உள்ளது. (08)

## மடுப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடல்

மடு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் புதனன்று காலை 10.00 மணிக்கு மடு உதவி அரச அதிபர் அ.மரியதாஸ் தலைமையில் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இடம்பெற்றது.

இதற்கு மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ். இனியவன் கலந்து கொண்டார்.இக் கூட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பிரதேசத்தின் அபிவிருத்தி எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (மி)

## பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை சங்கமம்

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தின் தேசியஎழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வு வியாழக்கிழமை இடம் பெற்றது. இந்நிகழ்வில் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றினார்.

காந்திநகர் தேசிய எழுச்சிப்பேரவைத் தலைவர் ஏ.அரியசிறி தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. தொடர்ந்து சிறப்புரைகளை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் நாதன், தமிழ் விடுதலைக் கூட்டணியின் மூர்த்தி. அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைவர் செந்தில்நாதன் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வில் செட்டிகுளப் பிரதேசத்தின் அபிவிருத்தி, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர் பாகவும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் கரும்புலிகள் உயிராயுதம் இசைத் தட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (21)

## அபிவிருத்திவேலைகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலை பொதுவைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வருகிறது.(மி)




ஆசிய-ஜப்பானிய உறவுப் பாலத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜப்பானிய தொண்டர் ஸ்தாபனங்களின் திட்டங்களுக்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடல் வைபவத்தில் ஜப்பானிய அரசாங்கம் சார்பாக ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடாவும், இலங்கைக்கான பிரதிநிதியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதையும் இவ் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் கலந்து கொண்டிருப்பதையும் மு லாவது படத்திலும் பெண்களுக்கான தையல்பயிற்சியினை தூதுவரும் அரச அதிபரும் பார்வையிடுவ[illegible]த இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்:-சோதி, வரன்)

## நெடுங்கேணி-சேமமடுப்பகுதியில் பொது மகன் ஆயுததாரிகளால் தாக்குதல்

(முள்ளியவளை)

நெடுங்கேணி சேமமடுப் பகுதியில் கடந்த வாரம் இனந்தெரியாத குழுவினால் புளியங்குளம் சமளங்குளத்தைச் சேர்ந்த வெற்றிவேல் வெற்றித்திருமகன் (வயது24) என்பவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; கடந்த 03.08.2004 காலை 7.00 மணியளவில் அவரது வீட்டு முற்றத்தில் நின்றபோது இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய குழு காட்டுப்புறமாக நின்று கூப்பிட்டு காட்டுக்குள் கொண்டுசென்று ஊர்த்தகவல்கள் தொடர்பாக, கேட்டுப் பலமாக அடித்துச் சித்திரவதை செய்து விட்டுத் தன்னை அவ்விடத்திலேயே குப்புறப்படுத் திருக்குமாறும், தாம் சென்று விசில் (வாயால்) அடித்தவுடன் எழுந்து செல்லுமாறும் பணித்துவிட்டு சென்ற குழு விசில் அடித்தபோதும் பயத்தின் காரணத்தால் எழுந்து ஓடாது படுத்திருந்த போது வேறு இருவர் ஆயுதங்களுடன் முகமூடி தரித்தவாறுதன்னை ஓடிச் செல்லுமாறு மிரட்டியதும் தான் மாலை 5.00மணியளவில் ஓடி தனது வீட்டுக்கு உயிர்தப்பி வந்ததாகவும் தெரிவித்தாகத் தெரியவருகின்றது. மேற்படி பகுதியானது கரையோரமாகவுள்ளது. இதன் பகுதி காடுகளால் சூழப்பட்டது இக்காட்டு வழியூடாக சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் சிங்களக் குடியேற்றமும், சிறிலங்கா இராணுவ முகாம்களும், சிங்களகாடையர் குழுகளும், சிங்கள ஊர்காவல்படைகளும் உள்ளன.

மேற்படி குழுவினர் வைத்திருந்த துப்பாக்கித் தடயத்தின் படி அது சிங்கள ஊர்காவற் படைகள் வைத்திருக்கும் சொட்கண் மற்றும் றிப்பிற்றல் துப்பாக்கிகளே என மேற்படி நபர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலை அடுத்து மேற்படி பகுதிக்கு தமிழ் மக்கள் அச்சமின்றி மீளக்குடியமர்ந்து தமது இயல்பு வாழ்வை ஆரம்பித்துள்ள வேளையில் மேற்படி சம்பவமானது அப் பகுதி மக்களை மிகுந்த அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. மேற்படி கிராமக் காட்டில் சிங்களவர்கள் வேட்டைக்காகவும், தேன்எடுப்பதற்கும் என வந்து போவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

## மலேரியா நோயாளர் மூவர் இனங்காணல்

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் மலேரியா இரத்தப் பரிசோதனை மூலம் 3 மலேரியா காய்ச்சல் நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக 100இற்கும் மேற்பட்ட காய்ச்சல், நோயாளிகளில் இரத்தப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 3 மாதங்களில் மூவர் மட்டுமே மலேரியாக் காய்ச்சல் நோயாளிகள் என இனங்காணப்பட்டதாக மேற்படி வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராசதுரை எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (ஆ)

## நெடுங்கேணி பிரதேச செயலகம் புதிய கட்டடத்தில் விரைவில் இயங்கும்


### -பிரதேச செயலர் க.ஐயம்பிள்ளை தகவல்

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணியில் பிரதேச செயலகம் புதிதாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு கிழக்கு அவசர புனரமைப்பு திட்ட நிதி உதவியுடன் கட்டப்படும் பிரதேச செயலகம் தற்போது இயங்கிவரும் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் அமைக்கப்படுகின்றது. இதனுடைய வேலைகள் மிகவும் துரித கதியில் நடைபெற்று விரைவாகத் திறப்பதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது என நெடுங்கேணி பிரதேச செயலர் க.ஐயம்பிள்ளை தெரிவித்தார்.

அத்தோடு தற்போது இயங்கிவரும் பிரதேச செயலகம் இடவசதிகள் அற்ற சிறிய ஒரு கட்டடத்தொகுதியில் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (சோ,கு)



## இன்று விசாரணைக்கூட்டம்

காணி உறுதியற்றவர்களிற்கான விசாரணைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை கிளி/வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது காணி உறுதியற்ற வர்கள பதிவுகளை மேற்கொள்வதுடன் அவர்களிற் கான விசாரணைகள் சிவிக்சென்ரர் கிராமசேவகர் பிரிவிலும் வட்டக்கச்சி கிராம சேவகர் பிரிவிலும் நடைபெறும் எனக் கிராமசேவகரின் செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கின்றது. (12,15)

## கிடுகு வழங்கல்

வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தில் ஒக்ஸ்பாம் நிதி உதவியுடன் கிளி/கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரால் மீளவேய்தல் செயற்பாட்டுத் திட்டம் மூலம் கிடுகுகள் வழங்கப்பட்டுவருகின்றது.வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் மீளவேய்தல் திட்டத்தினரால் 125 குடும்பங்களுக்கு ஒரு வீட்டிற்கு வேயக்கூடிய கிடுகுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கிடுகுகள் வழங்க ஏற்பாடாகி உள்ளது கிடுகுகள் எதிர்வரும் 20ஆம திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது(12)

## சிலாவத்தை அன்னம்மாள் ஆலய புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு-சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலய புனரமைப்பிற்காக புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக கிறிஸ்தவ விவகார அமைச்சினால் 17 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயம் 1990ஆம் ஆண்டு இராணுவத்தினரால் அழிக்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களின் பெரிய தேவாலயமாக விளங்குகின்ற இவ்வாலயத்தை புனரமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றது. இன்று ஆலயக்கட்டடத்தினை பொறியியலாளர்கள், ஆலயபரிபாலன சபையினர், கச்சேரி பணியாளர்கள் சென்று கடந்த வியாழனன்று பார்வையிட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(20)

# யாழ். முன்பள்ளிஆசிரியர்களுக்கு துறைசார் அறிவூட்டல் அவசியம்

## - பலர் பயிற்சியின்றியுள்ளதாகத் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்ட முன்பள்ளிகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அதற்கான துறைசார் பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் அவசிய மானதாகவுள்ளதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளில் பயிற்று வித்து வரும் ஆசிரியர்களில் பெருமள வானோர் துறைசார் அறிவூட்டல் கள், வழிகாட்டல்கள் என்பன இன்றி கடமையில் ஈடுபட்டு வரு கின்றனர்.

அந்தவகையில் யாழ். மாவட் டத்தில் தற்பொழுது இயங்கிவரும் 681 பதிவு செய்யப்பட்ட முன் பள்ளிகளில் 1,125 ஆசிரியர்கள் கடமையாற்றிவருகின்றனர். இவர் களில் 846 ஆசிரியர்கள் மட்டுமே முன்பள்ளி சிறார்களின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான பயிற்சி யைப் பெற்றுள்ளனர். ஏனை யோர் துறைசார் வழிகாட்டல்கள், பயிற்று விப்புக்கள் இன்றியோராகக் காணப்படுகின்றனர்.

இதனால் யாழ்.மாவட்டச் சிறார் களுக்கான கற்பித்தல் செயற்பாடு களில்பெரும்குறைபாடுகள் காணப் படுவதாகவும், இது சிறார்களின் கல்வி எதிர் காலத்தையும் பெரிதும் பாதித்திருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (33)

# கற்கோவளம் கடற்கரைக்கு சுற்றுலா சென்றோர் இராணுவத்தால் விரட்டியடிப்பு

வடமராட்சி கற்கோவளம் கடற் கரைப் பிரதேசத்திற்குச் சென்ற உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை அங்கு நிலை கொண்டுள்ள இரா ணுவத்தினர் கலைத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் பல பகுதி யில் இருந்து மக்கள் வாரவிடு முறையைக் கழிப்பதற்கு இங்கு செல்வது வழமை. வழமை போலவே கடந்த சனிக்கிழமை யன்றும் அங்கு சென்ற உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் லெப்ரினன்தர இராணுவவீரர் ஒருவர் உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு உத்தர விட்டதாகவும் பொது மக்கள் கூறி னர்.

இது தொடர்பாக அவர்கள் விவாதித்த போது பாதுகாப்புக் காரணங்களிற்காகவே உடனடி யாகப் போகுமாறும் கூறியுள்ளார். அவர் இது தமது மேலதிகாரியின் கட்டளையெனவும் குறிப்பிட்டதாக மக்கள் கூறினர்.

இச்சம்பவத்தின் போது அங்கி ருந்துசெல்லமறுத்த யாழ்.பல் கலைக்கழக மாணவர் ஒருவரை அச்சிப்பாய் அங்கிருந்து தள்ள முயற்சி செய்ததாகவும் தெரிய வருகிறது. எனினும் அங்கிருந்து அவ் இராணுவவீரர் சென்றதன் பின்னர் மக்கள் அங்கு ஒன்று சேரத் தொடங்கியதாகவும் தெரிய வருகின்றது.

# படையினரின் நடவடிக்கையால் சுழிபுரத்தில் கடலரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் கடற்கரை கடலரிப்பினால் பெரிதும் பாதிக்கப் படுவதாகவும், இதனால் அப்பகுதி மக்களின் கடற்கரைக் குடியிருப்பு களினுள் கடல்நீர் உட்புகும் அபாயம் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கடற்கரையை கடலரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான கல் அணைகளை அமைக்கக் கடற்படையினர் தடைவிதித்திருப்பதாலும், இப் பகுதி கடற்கரைகளில் மணல் மண் அகழப்படுவதை தடுக்கப் பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்காமையுமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# குடிநீர் விநியோக நேரத்தை மேலும் அதிகரிக்க வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கரவெட்டிப் பிரதேச மக்களுக்கான குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்புச் செய்யுமாறு அப்பகுதி மக்கள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசத்தில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவும் பகுதிகளிற்கு குழாய் மூலமாகக்குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றபோதிலும் அவை காலையிலும், மாலையிலும் ஒருசில மணி நேரத்திற்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றமையால் அப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான நீரினைப் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர் கொள்கின்றனர்.

எனவே இதனைக் கவனத்தில் கொண்டு அனைத்து மக்களும் தமக்குத் தேவையான அளவு குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி மேற்படி குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# மிதிவண்டி–வான்மோதல் முதியவர் படுகாயம்

(தென்மராட்சி)

துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த முதியவர் மீது வான் மோதியதில் முதியவர் படுகாயமடைந்தார்.இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது மிருசுவிலில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரியகுட்டி முருகையா (வயது 65) என்பவரே வான் மோதியதில் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (28)

# கைதடி முருகன் ஆலயத்தை பொதுமக்கள் வழிபட விடுக!

## - படையினருக்கு நிர்ப்பந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி கைதடிப் பிரதேசத்தில் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் முடக்கி வைக்கப் பட்டுள்ள கைதடி முருகன் ஆல யத்தைப்படையினர் மீண்டும் மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என கேரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கைதடியில் உள்ள உயர் பாது காப்பு வலயத்திற்கு வெளியே இதுவரை காலமும் காணப்பட்ட மேற்படி ஆலயம் அண்மையில் கைதடிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ அதிஉயர்பாது காப்பு வலய விஸ்தரிப்பு நடவடிக் கைகள் காரணமாக இராணுவ பாதுகாப்பு வலயத்துள் உள்வாங் கப்பட்டதையடுத்து இவ் ஆலயத் திற்குச் சென்று வழிபட மக்க ளுக்குப் படையினர் தடைவிதித் துள்ளனர்.

இதன் காரணமாக மக்கள் அவ் ஆலயத்தினை வழிபடச் செல்ல முடியாத நிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டியே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. - (33)

# சாவகச்சேரி நகர மருத்துவ நிர்வாக கட்டடம் புனரமைக்க ஜப்பான் உதவி

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படையின ரின் குண்டுவீச்சால் தரைமட்டமாக் கப்பட்ட சாவகச்சேரி நகர மருத் துவ நிர்வாகக் கட்டடம் 2005 ஆம் ஆண்டளவில் ஜப்பான் நிறுவகத் தின் உதவியுடன் கட்டப்பட உள் ளது.

இதைக்கட்டித்தர ரூபாய் ஒன்றரைக்கோடி செலவிடப்பட விருப்பதாகவும் தெரிய வருகிறது. நகரத்தில் மக்கள் தொகை பொருக் கத்தைக் கருத்தில் கொண்டும், மக்களின் சுகாதார தேவையைக் கருத்தில் கொண்டும் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

இந்த நிர்வாகக் கட்டடத்தில் வெளிநோயாளர் தனிச் சிகிச்சைப் பகுதி, சிகிச்சை நிலையம், பல் சிகிச்சை நிலையம், நிர்வாக அலு வலர் தொகுதி, பணியாளர் ஓய்வு அறை போன்றவை உருவாக்கப் படவுள்ளது. (28)

# அல்லைப்பிட்டி- மண்கும்பான் வீதி நிலைகுறித்து கவனத்தில் கொள்க!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள அல் லைப்பிட்டி - மண்கும்பான் வரை யிலான பிரதான வீதி மிக மோச மாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப் படாது காணப்படும் மேற்படி வீதி யின் சீரற்ற தன்மையால் அவ் வீதியூடாக பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனு பவித்து வருகின்றனர்.

இது குறித்து அப்பகுதி மக் கள் பல தரப்பினரிமும் முறை யிட்டும்கூட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(33)

# துணுக்காய் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் வீர முரசு மாதாந்த அரங்க நிகழ்வு சிறப்புடன் நடைபெற்றது மேற்படி நிகழ்வானது துணுக்காய் வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.ஈழக்கண்ணன் ஒழுங்குபடுத்தலில் துணுக்காய் விளையாட்டு மைதா னத்தில் சிறப்பாக அலங்கரிக் கப்பட்ட மேடையில் கடந்த வியாழ னன்று இரவு7.30மணிக்கு கோட்டத் தேசிய எழுச்சி பேரவை உறுப் பினர் சி.சண்முகநாதன் தலை மையில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை முல்லைமாவட்ட தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் சி.மயூரன் ஏற்றி வைக்க மாவீரர் களின் பொது திருவுருவப்படத் திற்கு ஈகச்சுடரினை துணுக்காய் பிரதேச செயலாளர் திருமதி ப.தியாகராஜா கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் ஏற்றிவைத்ததை தொடர்ந்து மலர் மாலையினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரெத்தினம் அணிவித்தார். சிறப்புரையை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் முல்லை மாவட்ட அர சியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங் கினர்.

மல்லாவி மத்திய கல்லூரி மாணவி செல்வி விஜயதர்சினியின் நடனம், ஜயன்குளம் மகாவித்தி யாலய மாணவிகளின் குழு நட னம், கவிதை, வரலாறு தந்த புலி கள் எனும் உரைச்சித்திரம், தர்ம பூபதி அவர்களின் நெறியாக்கை யில் உருவான துரோகத்தின் பரிசு என்னும் நாடகம் என்பன மிகச் சிறப்புடன் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப் பினர்கள் போராளிகள் பொது மக் கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (24)

# மன்னார் மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடிக்கு உதவி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்யும் முகமாக வவுனியா, மன்னார் நன் னீர் மீன்பிடித் திணைக்களப் பணிப் பாளர் சி.சுதாகரன் நடவடிக்கை களை எடுத்துள்ளார்.

மன்னார் வருகை தந்த அவர் பெரியமடு பரப்பான் கண்டல், மாவிலங்கேணி கற்கடந்த குளம், செம்மன்தீவு, இரட்டைக்குளம் போன்ற பகுதி மக்களுக்கு 500 வலைகளும்60 மரத்தோணிகளும் வழங்கியுள்ளார். (மி)

# செம்மலை மத்திய மருந்தகக் கட்டட நிர்மாணிப்பில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

(முல்லை)

மணலாற்றுப் பகுதி செம்மலை யில் மத்திய மருந்தகத்திற்கான ஆரம்ப வேலைகளை மக்கள் முன் நின்று செய்து வருகின்றார் கள்.

நீர்ப் நிறுவனத்தின் நிதி உதவி யுடன் கட்டப்பட்டு வரும் மத்திய மருந்தகத்தின் அடிக்கல் கடந்த மாதம் முல்லை மாவட்ட அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமாரி



னால் நாட்டப்பட்டது.

அன்றிலிருந்து அப்பகுதி மக்கள் அனைவரும் திரண்டு ஆரம்ப வேலைகளை மிகூவும் ஆர் வத்துடன் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# தரமுயர்வு

(மன்னார்)

மன்னார் தாழ்வுப்பாடு புனித வளன் கனிஸ்ட பாடசாலை 2004 ஆம் ஆண்டு 2 ஆம் தவணை முதல் முதலாம்தர சிரேஸ்ட பாட சாலையாக தரம் உயர்த்தப்பட் டுள்ளது.

இதற்கான அனுமதிக் கடிதத்தை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் ஊடாக அனுப்பியுள்ளர். இதுவரை க.பொ.த (சா/த) பாடசாலையாக இருந்த இப்பாடசாலை இனிமேல் க.பொ.த (உ/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (மி)

# புதுக்குடியிருப்பில் மையக்கிராம வீதிகள் புனரமைக்க ஏற்பாடு

புனர்வாழ்வு புன்ரமைப்பு அமைச்சு நிதியில் வடகிழக்கு மாகாணசபை வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் நியாப் ஊடாக புதுக்குடியிருப்பு மையக் கிராம வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதி திருத்தத்திற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வேலைகள் நடைபெறும் எனத் தெரியவருகின்றது. (20)

# அரசியல் அனாதைக்கு தலைமைத்துவம் கிடைத்தது ஏன்?

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவிக்கு ஏன் நியமித்தார்கள்? அரசியல் வாதிகள் எல்லோரும் மிக உன்னிப்பாக இதைக் கவனித்த வண்ணம் உள்ளனர். இவர் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் உடன்படிக்கை செய்யும் பொழுது இவர் கட்சியில் இருக்கின்றாரா? இல்லையா? என்ற ஞாபகம் கட்சிக்குள் இருக்கவில்லை. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பொழுது கட்சியின் பட்டியலிலும் தேசியப் பட்டியலிலும் இவரின் பெயர் நீக்கப்பட்ட ஒரு அரசியல் அனாதை ஆவார். சுதந்திரக்கட்சியினர் எதிர்பாராத வண்ணம் இவர் எப்படி கட்சித்தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

மகிந்தராஜபக்ஷ அவர்கள் பிரதமப் பதவியேற்று நான்கு மாதங்கள் முடிந்துள்ள வேளையில் அவர் பதவியேற்ற அதே தினத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க





சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றுள்ளார். எப்படி ஏற்றுள்ளார்? எதற்காக ஏற்றுள்ளார்? இவைகள் யாவும் தேடிப்பார்க்க வேண்டிய விடயங்கள். இவைகளைத் தேடிப் பார்ப்பதற்கு முன்னதாக சந்திரிகா, விக்கிரமநாயக்க ஆகிய இருவரினதும் அரசியல் வாழ்க்கைகளை ஆரம்ப காலம் முதல் இன்றுவரை அலசி ஆராய வேண்டியுள்ளது. 1982 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இவ்ர்களின் அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகியது. 1982 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிக்க வேண்டும் என்று மகிந்தராஜபக்ஷவும் அனுராவின் ஆதரவாளர்களும் அப்போதைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவை வற்புறுத்திக் கேட்டவர்கள் இவைக்ளை எல்லாம் சந்திரிகாவையும் விஜயகுமாரதுங்கவையும் தனது பகடைக்காயாக்கி இவர்கள் மூலமாக சிறிமாவோ பண்டாரநாயக்கவை வற்புறுத்தி அனுராவை சனாதிபதிப் போட்டியிலிருந்து விலக்கிய பெருமை ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சேரும். அப்பொழுது அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமையை ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் 1982 ஆம் ஆண்டு பறித்த பொழுது 1984 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக கட்சியின் சார்பில் யாரைப் போடுவது என்ற பிரச்சினைகள் கிளம்பியது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவைத் தோற்கடிக்கும் வல்லமை கொண்ட எவரும் சுதந்திரக்கட்சியில் இல்லை என்று ஆர் ஈஸ்டான் இகொமினைக் ரிச்சட் என்ற பத்திரிகையில் சிறிமாவோ பண்டார நாயக்க அம்மையார் பேட்டி கொடுத்திருந்தார். ஆனால் இவர்களுக்கொரு சுயேட்சை வேட்பாளரைக் கட்சியின் சார்பில் சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு தேவை யேற்பட்டிருந்தது. இந்த சுயேட்சை வேட்பாளர் மூலமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை மாற்றியமைக்க மீண்டும் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரை பாராளுமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதமராக்க முடியுமென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களாகிய சட்டத்தரணி விக்டர் தென்னக்கோன், பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திரா, சட்டத்தரணி சிறி பெரேரா ஆகியோர் சிறிமாவிடம் கூறினார்கள். இவர்களை சிறிமா அம்மையார் நிராகரித்தார். 1982 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிக்க வேண்டுமென இப்போதைய பிரதமர் மகிந்தராஜபக்ஷவும், அனுராவின் ஆதரவாளர்களும் கூறினார்கள். இதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்க எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதைக் கேள்வியுற்ற சந்திரிகாவும், விஜய குமாரதுங்கவும் பெரும் குழப்பத்திற்குள்ளானார்கள். ஆகவே இவர்கள் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளருமான ரட்ண சிறி விக்கிரமநாயக்கவும் சனாதிபதி வேட்பாளராக பண்டாரநாயக்க குடும்பத்தின் மிக நெருங்கிய உறவினரான ஹெட்டர் கொப்பே கடுவ அவர்களை சனாதிபதி வேட்பாளராக சிறிலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு தேர்ந்தெடுத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அனுரா பண்டாரநாயக்கவுக்கு எதிராகவே செயற்பட்டார். இல்லையேல் 1982 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்க தேர்தலில் நின்றிருப்பார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அத்தனகல்ல தேர்தல் தொகுதி காலியாக இருக்கும் பொழுது சந்திரிகாவுக்கும் குமாரதுங்கவுக்கும் பக்கத் துணையாகவிருந்து செயற்பட்டார். அப்பொழுது அத்தனகல்ல தொகுதிக்கு சந்திரிகாவின் பெயரை ரட்ணசிறி பிரேரித்தார். அதற்கு அனுராபண்டாரநாயக்க கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதேவேளை சந்திரிகாவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கும் கடும், முயற்சிகளை ரட்ணசிறி மேற்கொண்டார். ஆனால் சந்திரிகாவும் குமாரதுங்கவும் இடது சாரிக்கொள்கைகளைக் கடைப்பிடிப்பதால் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் முயற்சி தோல்வி கண்டது. ஆகவே கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஹெட்டர் கொப்பே கடுவை அவர்களைச் சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதாக ஏகமனதாகத் தீர்மானம் எடுத்தனர். கொப்பே கடுவ சனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதை எதிர்க்கவில்லை. பின் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களும் அனுராவின் ஆதரவாளர்களும் மகிந்தராஜபக்ஷவும் நுவரெலியாவுக்குச் சென்று கட்சியின் தீர்மானத்துடன் அனுரவைச் சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதென தீர்மானம் மேற்கொண்டனர். இதைத் தெரிந்துகொண்ட கட்சியின் பொதுச் செயலாளராகிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க, சந்திரிகா, அவரது கணவர் விஜய குமாரதுங்கவுடன் கம்பகாவில் கட்சியின் அவசர கூட்டத்தைக் கூட்டி ஹெட்டர் கொப்பே கடுவையின் பெயரைக் கட்சியின் கூட்டத்தில் பிரேரித்துச் சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதென கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டனர். சனாதிபதி வேட்பாளராக பிரகடனப் படுத்தப்பட்டார். இவைகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு சிறிமாவோ அம்மையாரும் அனுராவும், அனுராவின் ஆதரவாளர்களும் நுவரெலியாவில் இருந்தனர். இவர்கள் எல்லோரும் கட்சியின் கூட்டத்தைக் கூட்டி அடுத்த சுதந்திரக்கட்சி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்ட வேளையில் கம்பகாவில் நடந்த கட்சிக் கூட்டத்தை கேள்விப்பட்ட பொழுது எல்லோரும் குழப்பமடைந்தனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் தலைமையில் கம்பகா கூட்டம் நடந்தபடியால் அது சட்ட பூர்வமானது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. ஆனால் கட்சியின் தேர்தல் சின்னம் சம்பந்தமாக சட்டப் பிரச்சினைகள் ஏற்பட்ட படியால் தேர்தல் ஆணையாளருக்கு இது சிக்கலை உண்டுபண்ணியது. தேர்தல் சின்னம் சம்பந்தமாக தமக்குப் பாதகமாக அமைந்தால் வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து மக்கள் ஐக்கிய முன்னணியில் சில்லுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்க அனுராவை சனாதிபதி வேட்பாளராக நியமித்திருந்தார். ஹெட்டர் கொப்பே கடுவைக்கு சில்லுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான உரிமையை வழங்கக் கூடாதென தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர் பீடம் எடுத்தது. அதன் பின் இவர்கள் இரவோடு இரவாக நுவரெலியாவிலிருந்து தினேஷ் குணவர்த்தனவை சந்திப்பதற்கு கொழும்புக்கு வந்தனர். இதற்கான முழுப் பொறுப்புக்களையும் மகிந்தராஜபக்ஷ ஏற்று கட்சியின் தீர்மானத்தை அன்றிரவே தினேஷ் குணவர்த்தனவுக்குக் கையளித்தனர். சிறிமாவின் தீர்மானத்தைப் பார்த்ததும் தினேஷ் குணவர்த்தனா பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி கடித விபரங்களை சந்திரிகாவிற்கும், விஜய குமாரதுங்காவிற்கும் தெரிவித்தார். நாட்டுப் பிரஜாவுரிமையை சிறிமாவிடம் இருந்து பறித்தெடுத்த படியால் கட்சியின் செல்வாக்குத் தமக்கில்லை என நன்கு உணர்ந்த சிறிமா அம்மையார் தினேஷ் குணவர்த்தனவின் உதவியை நாடினார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்திற்கு முன்னதாகவே தமது கட்சியில் சில்லுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு கொப்பே கடுவைக்கு அங்கீகாரம் அளித்திருந்தார். பின் அவர் தனது இல்லத்தின் அனுராவின் ஆதரவாளர்கள் மகிந்தராஜபக்ஷ உள்ளிட்ட கொப்பே கடுவையின் ஆதரவாளர்களையும் வரவழைத்து இப்பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு ஒவ்வொருவரின் கருத்துக்கள் ஆராயப்பட்டபின் ஹெட்டர் கொப்பேகடுவை அவர்களுக்கு கட்சியில் செல்வாக்குச் அதிகரித்துள்ளதால் அவரை சனாதிபதி வேட்பாளராக சுதந்திரக் கட்சியின் சார்பில் நிறுத்துவதற்கு ஏக மனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. எல்லோரும் அவருக்குக் கை கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். மகிந்த ராஜபக்ஷ கை கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்கச்சென்ற பொழுது கொப்பே கடுவ





கைகொடுக்காமல் வேறு பக்கம் திரும்பிக்கொண்டார். உனது ஆதரவு எனக்குத் தேவைப்படாது. 20 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கிறது. அதற்குப் பிறகு உன்னை நான் கவனித்துக்கொள்கிறேன் என்று கூறி விட்டுத் திரும்பிப் பாராமல் சென்றுவிட்டார். இச் சம்பவம் அன்று நடந்த படியால் ராஜபக்ஷ அவர்கள் மனவிரக்தி அடைந்திருந்தார். இதில் சந்திரிகாவும், விஜயகுமாரதுங்கவும் வெற்றி பெற்றனர்.

இவைகளுக்கெல்லாம் பக்க துணையாக நின்று கடமை ஆற்றியவர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க ஆவார். சந்திரிகாவுக்குப் பிறகு இந்த நாட்டின் அடுத்த சனாதிபதியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் தகுதி உடையவர் யார். ரட்ணசிறிவிக்கிரமநாயக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் சிறிமாவோ பண்டார நாயக்கவிற்கு பின் சந்திரிகாவை கட்சியின் தலைவராக்குவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டவர். பின் சந்திரிகா கட்சித் தலைவியாகிய பொழுது ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதித் தலைவராக்க வேண்டும் என தீவிர எண்ணம் கொண்டிருந்தார். 2000 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக சிறிமா பிரதம பதவியிலிருந்து ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை சந்திரிகா பிரதமர் ஆக்கினார். 2001 ஆம் ஆண்டு தேர்தலின் பின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோல்வி கண்டபடியால் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தார். ஆனால் கட்சியில் அவரின் செயற்பாடுகள் திறமை இல்லாத படியால் அவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கி விட்டு மகிந்தராஜபக்ஷவை எதிர்க் கட்சித் தலைவராக சனாதிபதி நியமித்தார். கட்சியில் எதிர்ப்புக்கள் கிளம்பினாலும் அந்த எதிர்ப்புக் களைச் சமாளிக்கும் வல்லமை மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டு என சந்திரிகாவுக்கு நன்றாகத் தெரியும். 2004 ஆம் ஆண்டு ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து தேர்தலில் போட்டியிட்டு, ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி வெற்றி ஈட்டியது. இத் தேர்தலில் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தமது தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டதால் தேசியப் பட்டியலிலும், கட்சிப் பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டார். களுத்துறை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் பிரதமர் பதவி ரட்ணசிறி விக்கிரம நாயக்கவிற்கே கிடைத்திருக்கும். சந்திரிகாவின் எதிர்பார்ப்பும் அதுவே. பிறகு சந்திரிகா ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை தேசிய பட்டியலுக்கு எடுத்து அவருக்கு உதவிப் பாதுகாப்பு அமைச்சர் வழங்கப்பட்டது. தேசிய பட்டியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர் விலகும் வரையில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ள முடியாது.

கட்சி யாப்பின் படி எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் கட்சியின் பிரதமராக முடியும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியால் கட்சியில் இருந்து ஒருவரை பிரதமராக்குவதற்கு அதிகாரம் அவருக்கு உண்டு. இந்த நிலையில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்வதற்கு தாமதம் ஏற்பட்ட படியால் சனாதிபதி அவர்கள் மகிந்தராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார். இந்தப் பிரதமர் தேர்விலும் சனாதிபதி தோல்வியைத் தழுவிக்கொண்டார்.

இப்பொழுது மகிந்த ராஜபக்ஷ கட்சியின் செல்வாக்கைப் பெற்றுள்ளார். சந்திரிகாவினாலும் அனுராவினாலும் அவரை எதுவும் செய்து விடமுடியாது. ஆகவே அடுத்த சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிப்பதென்பது கட்சிக்குள் உறுதியாகிவிட்டது. ரட்ணசிறி விக்கிரமநாயக்க கட்சியின் தலைமைப் பதவியையும், மகிந்த ராஜபக்ஷ கட்சியின் பிரதமராக இருக்கின்றபடியால் இப்பொழுது அனுரா பண்டாரநாயக்க கட்சியில் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆகவே இந்த இருவரையும் எதிர்ப்பதற்கு அனுரா பண்டாரநாயக்கவினால் முடியாது. 1982 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிப்தி வேட்பாளராக போட்டியிடுவதை அன்று தடை செய்தது சந்திரிகாவும், ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் ஆவார்கள். 1994 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் அனுர பண்டாரநாயக்கவை சிறிமாவோ கட்சியின் வேட்பாளராக நியமித்ததை ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், சந்திரிகாவும் தடைசெய்தனர். இதனால் 1993 ஆம் ஆண்டு மனவேதனை அடைந்து

உப்புல் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்: அ. சக்திவேல்

அனுரா பண்டாரநாயக்க கட்சியை விட்டு விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். 2001 ஆம் ஆண்டு மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். பின் இவர் ஜே.விபி யில் இணைந்து கொண்டு அவர்களின் ஆதரவுடன் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது இவரின் நோக்கமாகும். இப்பொழுது ரட்ணசிறி விக்கிரமநாயக்க கட்சியின் தலைவராக இருக்கின்றபடியால் அனுராவுக்கும் மகிந்தராஜபக்ஷவுக்கும் அடுத்து சனாதிபதி வேட்பாளராகும் தகுதிகள் இவர்களுக்குக் கிடைக்குமா? அடுத்து சனாதிபதித் தேர்தலில் விக்கிரமநாயக்கவை வேட்பாளராக நிறுத்தி இதில் வெற்றி பெற்றால் அடுத்த பிரதமர் சந்திரிகா அம்மையார். அவர் இதில் தோல்வியைத் தழுவிக்கொண்டால் அடுத்த எதிர் கட்சித் தவைவர் சந்திரிகா. இதுவே இன்றைய சந்திரிகாவின் திட்டமாகும். இப்பொழுது பண்டாரநாயக்க குடும்பத்திற்கு பிரதமர் ராஜபக்ஷ பெரும் சவாலாக உள்ளார். கட்சியின் செல்வாக்கு அவருக்கு இருக்கின்ற படியால் சந்திரிகாவுக்குத் தான் நினைத்தபடி எதுவும் செய்ய முடியாது.

# கடந்த வாரத்தில்

## 05.08.2004-11.08.2004

### 05.

★ம.தி.மு.க செயலர் வைகோ உட்பட அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் மூவாயிரம் பேர் தமிழக மக்களை சந்திப்பதற்கான நடைப்பயணம் ஆரம்பம்


வைகோவின் நடைப்பயணம்

★அல்-ஹைதாவின் வன்முறைகளை முறியடித்து வரும் சவுதி பாதுகாப்பு படையினரால் தேடப்பட்டுவந்த பரிஸ்-அல்ஸஹ்ராணி கைது

★நஜாப்பில் சியா மதத்தலைவர் முக்ததா அல்சத்தாரின் ஆதரவாளர்களுக்கும் கூட்டுப் படையினருக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் 17 பேர் பலி 100பேர் காயமடைந்தனர். அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.


நஜாப்பில் தீவிரவாதிகள்

### 06

★சூடானில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் சூடான் வெளியுறவுத் துறை அமைச்சரும் ஐ.நா.விசேட தூதுவரும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

★ஜப்பானின் ஹிரோசிமா நகரில் அணுகுண்டுத் தாக்குதல் நடந்து 59 ஆம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டதுடன் இதன்போது இறந்த 140,000 பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.


பிரதமர் அஞ்சலி செலுத்துகிறார்

★இஸ்ரேல் படையினரால் கடந்த ஜுலை மாதத்திலிருந்து தடைசெய்யப்பட்ட ரபா அகதிமுகாமிற்கு அருகில் அமைந்த எகிப்து-காஸா எல்லைப் பகுதி மீளவும் திறக்கப்பட்டது.

★பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கார்ல், கிளரென்ஸ் என்னும் பெயருடைய தலையொட்டிப் பிறந்த குழந்தைகள் நியூயோர்க் நகரிலுள்ள புரோனக்ஸ் மருத்துவமனையில் வெற்றிகரமான முறையில் பிரித்து எடுக்கப்பட்டனர்.

★ஆப்கானிஸ்தானில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 2 தேர்தல் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

### 07.

★ஈராக்கின் பாலுஜாநகர் அருகேயுள்ள சமரா என்ற இடத்தில் வைத்து குவைத் நாட்டு சாரதி ஒருவரை ஈராக் தீவிரவாதிகள் கடத்தியுள்ளனர்.

★பாகிஸ்தானின் தெற்கு கராச்சியிலுள்ள வாடகைக் கார் நிலையத்திற்கருகே இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் 2பேர் கொல்லப்பட்டதுடன் 2 பேர் காயமடைந்தனர்.


கார்க் குண்டு வெடிப்பில்

★பங்களாதேஷின் சில்ஹெட் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் முக்கிய எதிர்க்கட்சியான அவாமிலிக் கட்சியின் தலைவர் மெஸ்பாஹுதீன் சிராஜீம் உட்பட 30 பேர் காயமடைந்தனர்.

★இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் அரிகோரியோராகங்கன் என்ற இடத்தில் இராணுவவீரர்களிற்கும் தீவிரவாதிகளுக்கு மிடையில் நடந்த சண்டையில் 10 பேர் பலியாகியுள்ளனர்.


காஷ்மீரில் ... படைவீரர்

★எகிப்தின் செங்கடல் பகுதியில் உல்லாசப் பிரயாணம் சென்றவேளை காணாமற்போன 12ஐரோப்பிய சுழியோடிகள் அக்காவெய்ன் தீவுப்பகுதியிலிருந்து 56 கிலோ மீற்றருக்கு அப்பால் மீட்கப்பட்டனர்.

### 08

★இரண்டாவது தடவையாக இந்தியா முற்றிலும் கனினி முறையில் இயங்கக்கூடிய அர்ஜுன் டாங்கிகள் இராணுவத்திடம் ஒப்படைப்பு


அர்ஜுன் ஒப்படைப்பில்

★சட்ட விரோதமாக இத்தாலிக்குப் படகில் பயணித்த 26 ஆபிரிக்கர்கள் கடலில் மூழ்கிப்பலியாகினர்.

★பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள முஸ்லிம் பாடசாலையருகே இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 8பேர் பலியாகியதுடன் 50பேர் காயமடைந்துள்ளனர்.

★ஆப்கானிஸ்தானின் தென்மாகாண கஸனியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமெரிக்க சிப்பாய் ஒருவரும் உள்ளூர் மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர்.

★தெற்கு அகமதாபாத்தில் இருந்து 250 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பக்ரோல் கிராமத்தில் வெள்ளம் ஏற்பட்டதனால் அங்குள்ள கிராமவாசிகள் புலம்பெயர்வு.


வெள்ளத்தால் அவலம்

### 09.


★ம.தி.மு.க செயலாளர் வை.கோ உள்ளிட்ட 9 பேர் மீதான பொடோ வழக்கினை தமிழக அரசு வாபஸ்

★பக்தாத்தின் புறநகர் பகுதியில் துணை ஆளுனரான ஷியாஹோமாகானோவை குறிவைத்து தற்கொலைப் படையாளியொருவர் நடத்திய தாக்குதலில் 7 பொலிசார் பலியாகியுள்ளனர்.

★ஜப்பானிலுள்ள மின்வழங்கும் அணு ஆலையில் கசிவு ஏற்பட்டதனால் நால்வர் பலியாகினர்.

★ஈராக்கியத் தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜோர்தான் நாட்டவர்கள் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

★கார்கில் போரின் போது பாகிஷ்தானியர்களால் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் இருவர் விடுதலை.


விடுதலையின் மகிழ்வில்

### 10

★இஸ்தான் புல்லிலுள்ள இரு ஹோட்டல்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் இருவர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் காயமடைந்தனர்.

★அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் (சி.ஐ.ஏ) தலைவராக ஜனப்பிரதிநிதிகள் சபையின் புலனாய்வுக் குழுவின் தலைவர் போட்டெர் கொஸ்ஸை அமெரிக்க சனாதிபதி புஷ் நியமித்துள்ளார்.

★டொமினிக் குடியரசிலிருந்து கடல் வழியாகச் சிறியபடகில் அமெரிக்காவின் போட்டோரிகோவுக்கு செல்ல முற்பட்ட வேளை உடல் வரட்சியின் காரணமாக 50 பேர் பலியாகியுள்ளனர்.

### 11

★தாய்வானில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு விவாதம் பாராளுமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது. இதன் போது யாப்பின சில பகுதிகளை திருத்துவது குறித்து விவாதிக்கமுடிவு.

★அமெரிக்கப்பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆப்கான் தலைநகர் காபூலுக்கு விஜயம் மேற்கொண்டு ஆப்கான் சனாதிபதி ஹமீட்ஹர்காய் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் மொகமட் பாகீம் ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

★தென்கிழக்குச் சீனாவில் யுனான் மாகாணத்திலுள்ள லுடியன் என்ற இடத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் 3 பேர் பலியானதுடன், 594 பேர் படுகாயமடைந்துள்ளனர். இங்கு 5.6 ரிக்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

★காஸாவிலுள்ள அகதி முகாம் மீது இஸ்ரேலிய உலங்குவானூர்தி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 15 பேர் காயமடைந்தனர்.

★அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள முக்கிய இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்துமாறும் அல்ஹைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் அவரது அமைப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★துருக்கியில் பயணிகள் ரயில்கள் இரண்டு நேருக்கு நேர் மோதுண்டதில் 6 பேர் பலியாகியதுடன், 85 பேர் காயமடைந்தனர்.

# திருமலை மாவட்ட தமிழ் விவசாயிகள் சிறிலங்கா அரசால் புறக்கணிப்பு

## - விவசாய சம்மேளனம் கண்டனம்

திருகோணமலை மாவட்ட தமிழ் விவசாயிகளுக்கு இதுவரை எவ்வித வரட்சி நிவாரணமோ, வேறு உதவிகளோ வழங்கப்படவில்லை. திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தவறுவதையிட்டு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். என்று கப்பல் துறை விவசாய சம்மேளனம் வெளியிட்டஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "திருமலை மாவட்ட விவசாயிகளின் வளங்கள் அனைத்தும் யுத்தத்தின் மூலம் அழிக்கப்பட்டுவிட்டன. இவர்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்கான உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை.

2003ஆம் ஆண்டு பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயம் பாதிக்கப்பட்டது. சிறுபோக வேளாண்மையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இது குறித்து திருமலைப் பிரதேச செயலகத்தின் முன்பாக மறியல் போராட்டம் நடத்தியும் பலன் கிடைக்கவில்லை.

இப்போது குருநாகல், அநுராதபுரம், புத்தளம், பதுளை, மொனராகலை, மாத்தளை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களுக்கு வரட்சி நிவாரண உதவி வழங்க மத்திய அரசு 440 மில்லியன் ரூபா ஒதுக்கியிருப்பதாக தெரியவந்துள்ளது. வரட்சியினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கும் இந் நிவாரண உதவி கிடைப்பதற்கு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(25)

### சுகாதாரம் பேண வேண்டுகை

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி குடிநீர் கிணறு சுகாதார சீர்கேடான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. மேற்படி கல்லூரி குடிநீர் கிணற்றுக்குள் தடிகள், பொலிதீன் பைகள், கடதாசிகள், சருகுகள், இலைகள்என்பன காணப்படுகின்றன. மேற்படி கிணற்று நீரினையே கல்லூரி மாணவர்கள் வழங்கல் குழாய்கள் ஊடாகவும், கிணற்றில் அள்ளியும் குடித்து வருகின்றனர். இதனால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதை அவதானிக்க முடிகிறது. (ஆ)

# "சர்வதேச பயங்கரவாதமும் இலங்கை இனப்பிரச்சினையும்"

## ஓகஸ்ட்-20 நோர்வேத் தலைநகரில் மாநாடு

காங்கிரஸ் மையத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு உலக பயங்கரவாதத்தை துவம்சம்செய்ய வேண்டுமானால் பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்பட வேண்டும் என்ற தலைப்புடன் ஆரம்பமாக உள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்

நோர்வே இலங்கையில் மேற்கொள்ளும் சமாதானம், அந்த நாடு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி மற்றும் பாதுகாப்பை வழங்கி வருகின்றமை, நோர்வேயின் 25 வருட கால சமாதான முயற்சிகள், உலக தற்கொலை குண்டுத் தாக்குதல்கள், கனடாவில் உள்ள புலிகள் சர்வதேச புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகள், பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் உலக நாடுகளின் சட்டங்களில் காணப்படும் குறைபாடுகள், போன்றவை தொடர்பில் இந்த மாநாட்டில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் மஹிபால, அமெரிக்கரான பீட்டர் சார்ல்ஸ், இலங்கையரான சாந்த ஹெஹன்ஹந்தி, போன்றோரே தமது கருத்துக்களை வழங்கவுள்ளனர்

விசேட அம்சமாக இலங்கையின் சமாதானத்தில் நோர்வேயின் பங்கு என்ற தலைப்பில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிராஸ்கர் உரையாற்ற விருந்த போதும், அத்றகுப் பதிலாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் முன்னாள் பேச்சாளர் லீஸா ஹோன்டா உரையாற்றவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# சிங்கள மொழி வகுப்புக்கள்

## பிரிவு II ஆரம்பம்

01. பிரிவு IIஇற்கான மாணவர் தொகைவரையறுக்கப் பட்டுள்ளதால் உடனடியாக பெயர்களைப் பதிவு செய்து அதற்கான நேரஒழுங்கைப் பெற்றுக்கொள்ளவும்.
02. பேச்சுச் சிங்களம் மட்டும் பயில விரும்புவர்களுக்கான வகுப்புக்கள் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதால் அவர்களும் தமது பெயர்களைப் உடனடியாக பதிவு செய்து கொள்ளவும்.
03 அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கே முன்னுரிமைப்படுத்தி அவர்களுக்கேற்ற நேரஒழுங்கிலேயே வகுப்புக்கள் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறைந்த கட்டணத்தில் போட்டோக் கொப்பி, லெமெனேற்றிங், Stencil Cutting, Type Setting & Printing, போன்ற சிறப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

Ms Word, Ms Excel, Page maker புதிய பிரிவுகள் ஆரம்பம்

நிர்வாகம்
பி.எஸ்.ரி.தொழில்நுட்பம்
கச்சேரி அருகாமை,கிளிநொச்சி.

(4961)


# வடகிழக்கு மக்களுக்கு அடையாள அட்டை வழங்கிய மருதானை அலுவலகம் மூடப்பட்டுள்ளது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்களுக்கென தேசிய அடையாள அட்டை, மற்றும் பிறப்பு சான்றிதழ் என்பவற்றை வழங்கி வந்த மருதானை ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள முன்னரங்க செயலக பிரிவின் தேசிய அடையாள அட்டை வழங்கும் பிரிவு வெள்ளியன்று முதல் மூடப்பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து விடுக்கப்பட்ட விசேட உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இது தற்காலிக நடவடிக்கையே என முன்னரங்க பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.அண்மைக்காலச் சம்பவங்களே இதற்குக் காரணமென சந்தேகிக்கப்படுகிறது. (32)

# 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கண்டுபிடிப்பு

புத்தளம் தில்லையடி பகுதியில் சுமார் ஒன்றரைக் கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் வெள்ளியன்று இடம் பெற்றுள்ளது.

பொலிசார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி 50 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தென்னிந்தியர்கள் இருவரும் மன்னார் வாசி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் நேற்று புத்தளம் பதில் நீதவான் இக்பால் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# நீரில் மூழ்கிச் சிப்பாய் மரணம்

மட்டக்களப்பு வவுணதீவு குளத்தில் இராணுவத்தினர் ஒருவர் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழனன்று வவுணதீவு இராணுவமுகாமைச் சேர்ந்த நான்கு இராணுவத்தினர் வவுணதீவுக் குளத்தில் தெப்பத்தில் சென்ற வேளை அது கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவரது உடல் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பதுளையைச் சேர்ந்த வியெஸ்ரி (வயது 20) என்று படையினர் தெரிவித்துள்ளனர்.

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால்கீழ்க் காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01-பணிநிலை** :- **உத்தியோக உதவியாளர் தரம் - 03**

**தகைமைகள்** :-
- i. க.பொ.த (சாதாரணதர) தேர்வில் கணிதம் 42/கணிதம்II, தமிழ் உட்பட 05 திறமைச்சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த (உயர்தர) தேர்வில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- ii. ஆண்,பெண் இருபாலாரும்.

**மாதாந்த ஊதியம்** :- $\frac{3,670 - 5,070}{70 \times 20} + 6,000$

**அகவை எல்லை** :- 19 - 25 வருடங்கள்

**02-பணிநிலை** :- **பாதுகாப்பு உதவியாளர் தரம் - 03**

**தகைமைகள்** :-
- i. 10ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- ii. நல்லஉடல் வலுவும்,தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
- iii. உயரம் 5'5" இற்குக் குறையாமலும், நெஞ்சுச்சுற்று 32" இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
- iv. ஆண் பாலார் மட்டும்.
- v. கராத்தே போன்ற தற்காப்புக்கலைகளிற்கான சான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் என்பவற்றைக் கொண்டுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மாதாந்த ஊதியம்** :- $\frac{2,780 - 3,780}{50 \times 20} + 6,000$

**அகவை எல்லை** :- 28 - 35 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **'ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை, உத்தியோக உதவியாளர்'**. அல்லது **'ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை, பாதுகாப்பு உதவியாளர்'** எனக் குறிப்பிடப்பட்டு **2004.09.15** ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழவைப்பகத்தின் எல்லாக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

**மேலாளர்,**
**ஆளுகைப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு :-
01. முழுமையாக நிறைவு செய்யப்படாத சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் **(மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ் சாலை, கரடிப் போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு)** நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளையினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.


(ச.4786)

# சாவு அறிவித்தல்



## நல்லதம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற காணி அதிகாரி L.O)



டச்சுவீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை, வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற காணி அதிகாரி (L.O) 14.08.2004 காலமானார். அன்னார் காலம் சென்ற நல்லதம்பி இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும், காலம் சென்ற கந்தையா வள்ளிப்பிள்ளை (குஞ்சம்மா)வின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், விநோதா (வைத்திய அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலை), பிரபாகர் (கண்ணன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் லண்டன்), கவிதா(லண்டன்), கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அச்சுதன் (வைத்திய அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலை), யசோ(ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் லண்டன்), சிவகுமார்(கலாநிதி காடிப் பல்கலைக்கழகம் லண்டன்), ஜெயசீலன் (பொறியியலாளர் கட்டடத் திணைக்களம் முல்லைத்தீவு), ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தனன், பிரணவன், தட்சாயினி, சாரங்கியின் பாசமிகு பேரனும் ஆவார். இவர் திருமதி சுப்பையா செல்லம்மா, காலம் சென்றவர்களான ந.தர்மலிங்கம், திருமதி கனகசபை சின்னம்மா, திருமதி வல்லிபுரம் இராசம்மா, திருமதி சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை, திருமதி சோமசுந்தரம் பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16.08.2004 இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல்வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி

(4904)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

# எல்லை வேலி அமைக்கும் பணியில் பாக். தலையிடுவதை அனுமதிக்க முடியாது!

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

(புதுடில்லி)

**இந்திய-பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க வேலி அமைக்கப்படுகிறது. இப்பணியின் தடைகளை ஏற்படுத்துவதை இந்தியா சகித்துக்கொள்ளாது பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகார்ஜி எச்சரித்துள்ளார்.**

வேலிஅமைக்கும் பணிகள் முடியும் தறுவாயில் இருக்கும்போது பாகிஸ்தான் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதில் எந்த விதமான தலையீட்டையும் இந்தியா அனுமதிக்காது என்றார் அவர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவ வீர்களுக்கு தொலைக காட்சி மூலம் அவர் அளித்த செய்தியில் கூறியிருப்பதாவது இந்தியாவின் பாதுகாப்பிற்காக இந்தியா எல்லைக்குள் பாதுகாப்பிற்காக வேலி அமைக்கப்படுகிறது. இந்தியா பற்றி பாகிஸ்தான் தனது பழைய பாதையைக் கைவிடவேண்டும். அப்போதுதான் இருநாடுகளுக்கிடையே நட்பு உருவாகும் பாகிஸ்தானுடன் சாமாதானமாக வாழ்வதையே இந்தியா விரும்புகிறது. அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ளவும் விரும்புகிறது. ஆனால் பாகிஸ்தான் இதற்காக நேர்மையாக முயற்சிசெய்ய வேண்டும். பயங்கரவாதம் ஒழிந்தால் இரு நாடுகளுக்கும் உதவியாக இருக்கும். தெற்கு ஆசியப்பகுதியிலும் நல்லநவிளைவுகள் ஏற்படும். சீனாவுடன் எல்லைப்பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. இராணுவத்திற்கு ஆயுதங்கள் வழங்குவதில் ஊழல் நடைபெறாமல் கண்காணிக்கப்படும் ஆயுதங்கள் வழங்கும் நடைமுறைகளை மேலும் வெளிப்படையாக அரசு திட்டமிட்டு வருகின்றது.

இந்திய இராணுவத்தின் மூன்று பிரிவுகளும் பெருமளவு நவீனப்படுத்தப்படுகின்றது. இதற்காக மத்திய அரசின் பட்ஜெட்டில் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானப்படைக்கு அதிக எண்ணிக்கையில் ஜெட் போர் விமானங்கள் வாங்கப்படும். குண்டு துளைக்காத ஜாகெட்டுகளும் பணி தக்காமல் இருக்க கையுறைகளும் இரவில் பார்க்க வசதி செய்யும் கருவிகளும் வழங்கப்படும்.தொலை தூரங்களுக்கு சுடக்கூடிய துப்பாக்கிகளும் எடைகுறைவான ஹெலி கொப்டர்களும் வழங்கப்படும். போர்க்கப்பல் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தடைகள் நீக்கப்படும். இந்தியா-ரஷ்யா கூட்டுறவில் தயாரான பிராமேஸ் சூப்பர்சொனிக் ஏவுகணைகள் விரைவில் படையில் சேர்க்கபடும். ஜம்மு கஷ்மிரிலும் வடகிழக்குப்பகுதிகளிலும் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் இந்திய இராணுவம் சிறப்பாகச் செயற்பட்டது என்றார். பிராணாப் முகர்ஜி.

# பொடோ சட்டத்தை இரத்துச் செய்வது நாட்டின் பாதுகாப்பை வலுவற்றதாக்கும்

பொடோ சட்டத்தை இரத்து செய்வது நாட்டின் பாதுகாப்பை வலுவிழக்கச் செய்யும் என்று பாஜக தலைவர் வெங்கையா நாயுடு கூறினார்.

கும்பகோணம் பள்ளித் தீவிபத்தில் இறந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகை வழங்க சனிக்கிழமை கும்பகோணம் செல்லும் வழியில் திருச்சியில் நிருபர்களிடம் தெரிவிக்கையில் தீவிரவாதத்தைக் கருத்தில் கொள்ளாமல் பொடோ சட்டத்தை இரத்துச் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதனை நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. எதிர்க்கும். சில மாநிலங் களில் இச்சட்டம் தவ்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சில சம்பவங்களைக் காரணம் காட்டுகிறார்கள். தவறாகப் பயன்படுத்தப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப சட்டத்தைத் திருத்திக் கொள்ள லாம். ஆனால் சட்டத்தை நீக்கு வது சரியல்ல ஒரு காவல் நிலை யத்தில் விசாரணைக் கைதி இறந்து விட்டார் என்பதற்காக காவல் துறையையே நீக்கிவிட முடியுமா? பொடோ சட்டத்தை இரத்துச் செய்வது நாட்டி[illegible]து காப்பை வலுவிழக்கச் செய்யும். தேசப் பாதுகாப்பு நலன்களில் சமரசப் போக்குக் கூடாது ஐ.நா. சபையில இந்தியா உறுப்பு நாடாக உள் ளது. தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதற்காக ஐ.நா கொண்டு வந்த விதி எண் 1383 இற்கு ஆதரவு தெரிவித்துள்ளோம். தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தக் கொண்டுவரப்பட்ட பொடோ சட்டத்தை இரத்துச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இது சிலரைத் திருப்திப்படுத்தச் செய்யப்படுகிறது. இதற்காக பின்நாளில் வருந்த நேரிடும். மணிப்பூர் பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசும் மாநில அரசும் வேறுவேறு திசையில் செயற்படுகின்றன. மத்திய அரசு எதிர்க்கட்சியினரை நம்பவேண்டும். இப்பிரச்சினை குறித்து எதிர்க்கட்சிகள் ஏற்கனவே சொன்னபோது மத்திய அரசு ஏதும் செய்யவில்லை. ஆட்சிக்கு வந்தால் வருங்கால வைப்புநிதிக்கு 12 சதவீதம் வட்டி தருவோம் என்று வாக்குறுதியளித்தார்கள். இப்போது உள்ளதைவிட ஒரு சதவீதம் குறைத்து 8.5 சதவீதமாக அறிவித்துள்ளார்கள் என்றார்.

# குஜராத் முதலமைச்சருக்கு கொலை மிரட்டல்

குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடிக்கு இ.மெயில் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 8ஆம் திகதி நொய்டா என்ற இடத்தைச் சேர்ந்த அகமது பட்டேல் என்பவர்பெயரில் இந்தக் கொலைமிரட்டல் விடப்பட்டிருந்ததை அவரின் அலுவலக அதிகாரிகள் கண்டுபிடித்தனர். உடனே இது பற்றி தீவிரவாத ஒழிப்பு படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வழக்குப்பதிவு செய்து கொலை மிரட்டல் விடுத்தநபர் யார், அவர் குறிப்பிட்டிருந்த விலாசம் உண்மையா என்று விசாரித்து வருகின்றார்கள்.

# வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு திட்டம் சுதந்திரதின உரையில் இந்தியப் பிரதமர்



(புதுடில்லி) இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக முன்னேற்றம் அடையும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் மன்மோகன்சிங் தனது சுதந்திர தின உரையில் குறிப்பிட்டுள்ளார். நேற்று காலை டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அவர் ஆற்றிய உரை வருமாறு: சுதந்திர தினத்தில் நமது விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களை நினைவு கூருகிறோம். நமது இராணுவத்தினரின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கின்றோம். நமது பலம் வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்தில் தான் அடங்கியிருக்கிறது.கிராமப்புற இந்தியாவுக்கான புதிய கொள்கையில் விவசாயக் கடன்களுக்கு முன்னுரிமை,புதிய நீர் ஆதாரத் திட்டம் ஆகியவையும் அடங்கும். இதனால் நமது தேசம் விரைவில் வளம்பெறும். பொருளாதார வளச்சியின் பலன்கள் மக்களை பரவலாக சென்றடையும் வகையில் அதன் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் தனியார் நிறுவனங்களும் தனிநபர்களும் பயனடைவர். வேகமான பொருளாதார வளச்சியை இந்த தேசம் சந்திக்கும் வகையில் பொருளாதார கொள்கைகளும் திட்டங்களும் தீவிரப்படுத்தப்படும்.

இவ்வாறு தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை அச்சுறுத்தி வரும் தீவிரவாதங்களை எதிர்த்துப்போராட வேண்டியது நமது கடமை


*-ஜெயலலிதா சூளுரை*

நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் கடமை நம்மை எதிர்நோக்கி உள்ளது. என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார். சென்னையில் கோட்டைக்கு வெளியே ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுதந்திரதின விழாவுக்குப்பிறகு அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி அன்னியர் ஆட்சிக் காலத்தில் அன்னை நாடுபட்டதுன்பங்களைத் துடைக்கவும், அவலங்களை அகற்றவும் ஆயிரமாயிரம் வீரர்கள் வீராங்கனைகள் அன்று போராடினர். உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்துப் பெற்றுத் தந்த சுதந்திரம் இது. சுதந்திரத்தின் கனிகளைச் சுவைக்கிற நாம் வேர்களை நினைவு கொள்ளவேண்டிய நாள் இந்த வீரச்சுதந்திர திருநாள். இதயம் ஒன்றுதான் இந்தியத்தாய்க்கு நூறு கோடி முகங்கள் இருந்தாலும் இதயம் ஒன்றுதான். இந்த உண்மையை மறந்தால் எதிர்காலம் கேள்விக்குறியாகும். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டிய பெரும்கடமை ஒவ்வொரு இந்தியருக்கும் உண்டு. இதை நினைவுகொள்வோம் என்றார் முதல்வர்.

# "இயற்கை" தமிழ் படத்திற்கு சனாதிபதி விருது சிறந்த நடிகர் விக்ரம், நடிகை மீராஜஸ்மின்

(புதுடில்லி)

இயற்கை தமிழ் படத்திற்கு சனாதிபதி விருது கிடைத்துள்ளது. சிறந்த நடிகராக நடிகர் விக்ரமும் நடிகையாக மீராஜஸ்மினும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.





ஆண்டு தோறும் அகில இந்திய அளவில்சிறந்த சினிமா நடிகர்-நடிகை மற்றும் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு சனாதிபதி விருது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுக்கான விருதுப்பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. சிறந்த நடிகருக்கான விருதினை தமிழ் நடிகர் விக்கிரமிற்கு வழங்கப்பட்டது. டைரக்டர் பாலா இயக்கிய "பிதாமகன்" படத்தில் அவருடைய சிறந்த நடிப்பிற்காக நடிகர் விக்ரமுக்கு இந்தத் தேசிய விருது கிடைத்துள்ளது.

படம் ஒன்று ஒரு வில்லபம் என்ற மலையாள படத்தில் நடித்த மீராஜஸ்மின் சிறந்த நடிகைக்கான விருதைப்பெற்றார்.

தமிழ் மொழிப்படங்களில் "இயற்கை" சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய விருது பெறுகிறது. ஷாம், அருண்குமார், கதாநாயகனாகவும் குட்டிராதிகா கதாநாயகியாகவும் நடித்திருந்த இந்தப் படத்தை புதுமுக டைரக்டர் ஜனநாதன் இயக்கியிருந்தார்.

அகில இந்தியாவில் சிறந்த படமாக "லவ்ஸ்" என்ற மராட்டிய மொழி படம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. கண்பார்வை பறிபோகும் நிலையில் உள்ள ஒரு பேரனுக்கும், அவருடைய தாத்தாவுக்கும் இடையில் உள்ள உறவை உணர்வு பூர்வமாக இந்தப்படம் சித்தரிக்கிறது.


PATRICIAN INSTITUTES
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்:- 16.08.2004

| | | |
|---|---|---|
| i. | COMPUTER DIPLOMA COURSES | |
| ii. | CERTIFICATE COURSE | |
| iii. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 06 மாதங்கள் |
| iv. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்(தமிழ்) | காலம் 06 மாதங்கள் |
| v. | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol& Diesel) | காலம் 06 மாதங்கள் |
| vi. | ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங் | காலம் 06 மாதங்கள் |
| vii. | வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 08 மாதங்கள் |
| viii. | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி | காலம் 03 மாதங்கள் |
| ix. | மின் ஒட்டுனர் பயிற்சி | காலம் 06 மாதங்கள் |
| x. | மரவேலை | காலம் 06 மாதங்கள் |
| xi. | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 06 மாதங்கள் |

Note:-
1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதியஆதாரங்காட்டி பங்குக்குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமரன சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: REGISTRAR
PATRICIAN INSTITUTES
59,ST. PATROICK'S ROAD,
JAFFNA.
(சி-10127)







இத்தாலிய அல்டோ மொன் ரானோ (மத்தி) ஆண்களுக்கான தனிநபர் பட்டாக்கத்திப் போட்டியில் பதக்கம் வென்றதைக் கங்கேரி சோல்ற்நெம்சிக் (இடம்) விலடி கிலேவ்நெற்றிக் (வலது) ஆகியோருடன் கொண்டாடுகின்றார்.




எதென்ஸ்சில் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் ஸ்பெயினுக்கு எதிராக விளையாடிய ஆர்ஜன்ரீனா வீராங்கனைகள் ஆரம்பச் சுற்றில் முதலாவது கோல் பெற்றதை கொண்டாடுகின்றனர்.



எதென்சின் காப்ரான் சுக்லியே விளையாட்டரங்கில் பெண்களுக்கான கால்பந்தாட்டத்தின் போது அமெரிக்க வீராங்கனையான அபிவம்பாக் (வலது) பந்திற்காக பிரேசிலைச் சேர்ந்த டானியெலாவுடன் (இடது) மோதுகின்றார்.








# டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது சிறிலங்கா தென்னாபிரிக்கா 313 ஓட்டங்களால் படுதோல்வி

சிறிலங்காவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி 313 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றுள்ளது.

நான்காம் நாளான நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின் போது வேகப்பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது 21 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்த தென்னாபிரிக்கா இறுதி நாளான நேற்று 179 ஓட்டங்களு க்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வி அடைந்தது.



பந்துவீச்சில் சமிந்தவாஸ் சிறப்பாகப் பந்து வீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சிறிலங்கா அணி பெற்ற முதலாவது டெஸ்ட் தொடர் வெற்றி இதுவாகும்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சங்கக்காரவும், தொடர் நாயகனாக சமிந்தவாசும் தெரிவாகினர்.


இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி வரும் 20 ஆம் திகதி ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் பகல் இரவு போட்டியாக நடைபெறும்.



பெண்களுக்கான அம்பெய்தல் போட்டியில் குறிபார்க்கும் ஏழுமாத கர்ப்பிணியான ஜேர்மனியின் கொமாலியா புறொகி.



ஹொக்கிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியிடம் தோற்றதன்பின் ஆர்ஜென்டீனாவின் தோமஸ் மைக்கொமிக் (இடது) தனது அணிச்சகாவுடன்...



கூடைப் பந்தாட்டத்தில் நியூசிலாந்தைத் தோற்கடித்தமைக்காக இத்தாலியின் மஸிமோ புலேறியை கட்டித் தழுவும் நிகோலா றடுலோவிக்.

# பெண்களுக்கான ஹொக்கி நெதர்லாந்து அணி வெற்றி

ஒலிம்பிக் பெண்கள் ஹொக்கி போட்டியில் நெதர்லாந்து அணி 6-2 என்ற கோல் கணக்கில் தென் ஆபிரிக்க அணியை வீழ்த்தியது.

எதென்ஸ் ஒலிம்பிக் பெண்கள் ஹொக்கி போட்டி நேற்று முன்தினம் நடந்தது. முதல் போட்டியில், குறூப், 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள நெதர்லாந்து, தென்ஆபிரிக்க அணிகள் மோதின. ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே நெதர்லாந்து வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினர். இவர்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத தென் ஆபிரிக்க அணி இறுதியில் 6-2 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

நெதர்லாந்து அணியின் கேப்டனான மிஜின்த்ஜி டோனர்ஸ் 'ஹாட்-ரிக்' கோல் அடித்து அணிக்கு அபார வெற்றியைத் தேடித்தந்தார். இவரைத் தவிர, அஜித்பூம்கரித், பாத்திமா மோரிரா, மார்ட்ஜி சஹீப்ஸ்டிரா ஆகியோர் தலா ஒருகோல் வீதம் அடித்தனர்.

# இறுதிச் சுற்றில் பெல்ப்ஸ், தோர்ப்

நீச்சல் போட்டிகளின் இறுதிச் சுற்றுக்கு அமெரிக்காவின் மைக்கேல் பெல்ப்ஸ், அவுஸ்திரேலியாவின் இயான் தோர்ப் தகுதி பெற்றனர். ஒலிம்பிக்கில் இம்முறை அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் புதிய சாதனை படைக்கும் திட்டத்துடன் களமிறங்கியிருக்கிறார். ஒரே ஒலிம்பிக்கில் ஏழு தங்கம் வென்ற மார்க்ஸ்பிட்ஸ் சாதனையை அவர் முறியடிக்கும் திட்டத்துடன் இந்த ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார்.

# தேசிய ரீதியான கராத்தேப் போட்டிக்கு தகுதி பெற்ற வீரர்கள் கௌரவிப்பு

வடகிழக்கு மாகாண ரீதியில் கடந்த 8ஆம் திகதி திருமலை மக்கேசர் விளையாட்டரங்கில் நடைபெற்ற கராத்தேப் போட்டியில் தேசிய ரீதியான போட்டிக்கு தகைமை பெற்ற வீர வீராங்க னைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டியில் 50 கிலோ பிரிவில் கிளி.மாவட்ட வீரர் ந.கிறிஸ்தோபர் இரண்டாம் இடத்தையும், 65 கிலோ பிரிவில் ம.அருள்நேசன் முதலாம் இடத்தையும், 70 கிலோ பிரிவில் செ.லகுநாதன் முதலாம் இடத்தையும் 75 கிலோ பிரிவில் சி.விஜயராஜ் மூன்றாம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

பெண்களுக்கான போட்டியில் 48கிலோ பிரிவில் கல்பனா இரண்டாம் இடத்தையும், 60 கிலோ பிரிவில் தேவி இரண்டாம் இடத்தையும், 53 கிலோ பிரிவில் க.தனுசயந்தி முதலாம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

அத்துடன் காட்டாஸ் போட்டியில் க.தனுசயந்தி இரண்டாம் இடத்தையும், க.வினோதசயந்தி மூன்றாம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

இன்று கௌரவிக்கப்படும் வீர, வீராங்கனைகள் அனைவரும் பயிற்சி ஆசிரியர் சி.விஜயராஜின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# முரளிக்கு இன்று அறுவைச்சிகிச்சை நான்கு மாதங்கள் விளையாடமாட்டார்

சிறிலங்காவின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் நான்கு மாதங்களுக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவருக்கான சத்திரசிகிச்சை இன்று மெல்பேர்னில் நடைபெற இருக்கிறது. இதனால் முரளி நான்கு மாதங்கள் ஓய்வெடுக்க வேண்டுமென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர் உடனடியாகச் சத்திர சிகிச்சை செய்யாதுவிட்டால் முரளிதரன் கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடை கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதனால் உடனடியாகச் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.


இது முரளிதரனுக்கு எதிராகச்சாதனையை நிலை நாட்டக் காத்திருக்கும் சேன் வோர்ன் மொத்தமாக 9 டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளார். இந்தவருட இறுதி வரை. இதில் அவர் ஏராளமான விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவார்என எதிர்பார்க்கப்படுகிறது.


இது குறித்து முரளி தெரிவிக்கையில் வோர்ன் ஒரு வருடம் விளையாடாது இருந்தவர். அந்தக் காலத்தில் நான் சாதனையை நிலை நாட்டியிருந்தேன். எனவே சாதனை வோர்னுக்கு செல்லவேண் டியது அவர் சாதனையை முறியடித்தால் அதற்குக் கவலைப்படப் போவதில்லையென தெரிவித்துள்ளார்.






நோர்வேயைச் சேர்ந்த வீச்வொலிபோல் விளையாட்டு வீராங்கனை கற்றின் மாசெய்தி.





பெண்களுக்கான ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் பங்கேற்கும் அமெரிக்காவின் கௌட்னி மக்கூல்



பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் தகுதிகாண் சுற்றில் உற்சாகத்துடன் காணப்படும் அமெரிக்காவின் கௌட்னி மக்கூல், மோகினி பட்வார்ஜ், ரெறின் ஹம்ளே, கௌட்னி கியூபெட்ஸ், கார்லி போர்ற சன் ஆகியோர் இடமிருந்து வலமாக.





ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற அமெரிக்க வீரர் மைக்கல்பிலிப், வெள்ளிப்பதக்கத்தை வென்ற எரிக்லென்டிற் (இடம்), வெள்ளிப் பதக்கம் வென்ற கங்கேரியைச் சேர்ந்த லஸ்லோ செஸ் (வலம்) ஆகியோர் அரங்கில் நிக்கின்றனர். பிலிப் 4 நிமிடம் 08.26 செக்கன்களில் ஓடிமுடித்து உலக சாதனையை உடைத்துள்ளார்.



ஆண்களுக்கான படகோட்டும் போட்டியில் ஜேர்மனியின் எட்டு அணிகள் போட்டியிடு கின்றன.

## சிந்தனைக்கு



"இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## தீர்வல்ல, பேச்சுவார்த்தையே தேவை!

சிங்கள அரசாங்கங்களினால் முன்வைக்கப்படுகின்ற அல்லது திணிக்கப்படுகின்ற நிலைப்பாடுகளில் இருந்து தமிழ் மக்கள் பேசுவதென்பது சாத்தியமற்றதொன்று. அப்படி ஒரு மாற்றுயோசனை முன்வைக்கப்பட்டால் அது நிராகரிக்கப்படும் என்ற அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களிடம் இருந்து வந்த அறிவிப்பானது எதிர்பார்க்கப்படக் கூடியதொன்றே. ஏனெனில் அரசின் இத்திட்டமானது சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்தவோ அன்றி குழப்பத்திற்கு உள்ளாக்குவதற்கோ உதவுமே ஒழிய ஒருபோதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல உதவப் போவதில்லை.

சிறிலங்கா ஆட்சியாளர் இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த காலத்திலும் பல தீர்வுத்திட்டங்களை முன்வைத்ததுண்டு. ஆனால் இவை எவையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாதது மட்டுமல்ல. அவ்வாறு முன்வைத்த தீர்வுத் திட்டங்கள் எதுவும் சிங்கள ஆட்சியாளர்களினால் அமுல் படுத்தப்பட்டதாகவும் இல்லை.

இந்நிலையில் விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தீர்வுத் திட்டமானது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, பேச்சுவார்த்தை மூலம் நகல் திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்கும் விடுதலைப்புலிகள் தயாராகவே உள்ளனர். இது குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டும் உள்ளது. அது மட்டுமல்ல.

இந்நகல் திட்டமானது தீர்வுத் திட்டம் ஒன்று தமிழர் தரப்பில் இருந்து முன்வைக்கப்படுதல் வேண்டும் என்று எழுந்த கோரிக்கையின் அடிப்படையிலும்-பல மட்டங்களிலும் பல தடவை கலந்துபேசி தயாரிக்கப்பட்டதொன்றுமாகும்.

ஆகையால் இத்திட்டத்திற்கான மாற்றுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படுதல் என்பதும் பரிசீலிக்கப்படுவதென்பதும் தேவையானதும் அல்ல ஏற்றுக்கொள்ளத் தக்கதும் அல்ல. இது ஒரு புறம் இருக்க விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் என்ன இடையூறு உள்ளது. தமது உரிமைக்காகப் போராடிய ஒரு அமைப்பு தனது மக்கள்அங்கீகாரத்துடன் தீர்வுக்கான திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. இது தீர்விற்கான அடிப்படையாகக் கொள்ளத்தக்கதும் தர்க்க ரீதியிலும் நியாயப்பாடானதொன்றே. இதனைவிடுத்து மாற்றுத்திட்டத்திற்கான அவசியம் ஏன்?

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் அவரது கூட்டணியினரையும் பொறுத்து இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதை விட விடுதலைப்புலிகள் முன்வைத்த திட்டத்தின் அடிப்படையில் பேசுவதென்பதும் அவர்களுக்கு கௌரவப்பிரச்சினை ஆகிவிட்டது.

அதாவது விடுதலைப்புலிகளின் திட்டத்தின் படி பேசுவதென்பது சிறிலங்கா அரசின் மேலாண்மை இழக்கப்பட்டு விடும் என்றதொரு தாழ்வுச் சிக்கலை அவர்களுக்கு ஏற்படுத்துவதாகியுள்ளது. வேறு விதமாகக் கூறுவதானால் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரிப் பெற்றுக்கொண்டார்கள் என்றதொரு நிலையை உருவாக்கிவிடும். இது தமிழ் மக்கள் மீது மேலாண்மை செய்ய முனையும் அவர்களுக்கு விருப்பத்திற்குரிய தொன்றாக இல்லை.

இதனைத் தவிர அவர்கள் தற்பொழுது பேச்சுவார்த்தை மேசைக்கு வரமுனைவதானது இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்படுதல் என்ற உயர்ந்த நோக்கிலல்ல. பேச்சுவார்த்தை அவர்களுக்குத் தேவையானதாகவுள்ளது. ஆனால் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கத் தக்கதொரு தீர்வு அவர்களுக்குத் தேவையானதாக இல்லை. இந்நிலையில் புலிகள் முன்வைத்த திட்டத்தின் அடிப்படையில் பேசுவதென்பது அவர்களின் போக்கிற்கு இடையூறானதாகவே இருக்கும். அதாவது பேச்சுவார்த்தை மேசையில் காலத்தைக் கடத்துதல்/ இழுத்தடித்தல் என்பது சாத்தியமற்றதாகி சில முடிவுகளை நோக்கி முன்னேறவேண்டியுதாகி விடும். அல்லாது விடில் சமாதானப் பேச்சுவார்தைகளில் இருந்து வெளியேறிக் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டியதாகிவிடும்.

ஆனால் இவை இரண்டும் ஆட்சியாளர்களுக்கு விரும்பத்தக்கதாக இல்லை. இந்நிலையில் தான் மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைத்து அதனை வைத்துப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசு முனைகின்றது. இதன் மூலம் சிங்கள அரசு தனது மேலாண்மையை நிலை நாட்டுவதோடு பேச்சுவார்த்தையில் ஏற்படக்கூடிய காலதாமதத்திற்கும், குழப்பத்திற்கும் புலிகளை காரணமாக்க முற்படுகின்றது.

இத்தகையதொரு நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கம் அரசின் மாற்றுத்திட்டம் முன்வைக்கப்படும் முன்னரே தமது உறுதியான பதிலினைத் தெரிவித்துவிட்டமை சரியானதொரு தீர்மானமே. ஏனெனில் அரசாங்கம் தயாரிக்கும் மாற்றுத் திட்டம் குறித்து ஆராயவோ அதற்கென காலத்தை விரயம் செய்ய வேண்டிய தேவையோ ஏற்பட மாட்டாது. அத்தோடு மேலாண்மையுடன் நின்று பேசமுனையும் சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைக்கும் தக்கதொரு பதில் நடவடிக்கையும் ஆகும்.

# சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தே.அபிவிருத்திக்கான கொள்கையை உருவாக்குக!

### -இலங்கை தேசபிரேமி இயக்கம்

(கொழும்பு)

நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள் இடைக்கிடைமாறி ஆட்சி புரிவதால் நாட்டில் ஒரு நிலையான கொள்கைகள் இல்லாதபடியால், தேசிய அபிவிருத்திக்கொள்கை ஒன்றினை நாட்டில் அமைப்பதற்கு சகல அரசியல் கட்சிகளையும் வரவழைத்து அவர்களின் ஒருமித்த கருத்துக்களை பெறுவது மிக அவசியமென இலங்கை தேசபிரேமி இயக்கத் தலைவர் கருதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை லுனுகம் வேர பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு விவசாயிகள் விவசாயம் செய்வதற்காக லுனுகம் வேர குளத்தில் இருந்து விவசாயக் காணிகளுக்கு நீர் பாய்ச்சுமாறு கோரி மரத்தின் மேல் ஏறி உண்ணாவிரதம் மேறகொண்டுள்ளனர். இந்த நால்வரில் ஒருவர் இராணுவத்தைச் சேர்ந்த அங்க வீனமுற்றவரென தெரியவருகின்றது. விவசாயம் செய்வதற்கு தண்ணீர் பற்றாக்குறை எனவும்; குளத்தில் இருந்து குடிப்பதற்கு மட்டும் தண்ணீர் வழங்கமுடியும் எனவும் அப்பகுதி நீர்ப்பாசனத் திணைக்களகத்தினர் கூறியுள்ளனர்.

# வெலிக்கடை சிறைச்சாலைக்குள்ளிருந்து 60 செல்லிடத் தொலைபேசிகள் மீட்பு

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளின் போது அறுபது செல்லிடத் தொலைபேசிகள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட் டுள்ளன.

கடந்த மூன்று மாத காலமாக இந்த சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூர்தீன் மசூக் தெரிவித்துள்ளார். செல்லிடத் தொலைபேசிகள் மிகவும் நுட்பமான முறையில் சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# பா.உறுப்பினருக்கு இலகு தவணைமுறை கொடுப்பனவில் வாகனங்கள்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலகு தவணைக் கொடுப்பனவுகளில் வாகனங்களை இறக்குமதி செய்து வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தகவலை பாராளுமன்ற விவகார அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் ஏற்கனவே இலங்கைக்கு சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்டநிலையில் சுங்கப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் வாகனங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய வாகனங்களைத் தெரிவு செய்யலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஏற்கனவே கடன் அடிப்படையில் இந்தியாவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் உரிய கொடுப்பனவை செலுத்தாதவர்களிடம் இருந்து குறிப்பிட்ட வாகனங்கள் மீளப்பெறப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

### -கட்டாய மத மாற்றத்திற்கு எதிரான-

# தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க ஜா.ஹெல உறுமய ஜெனீவா செல்லும்

ஜாதிக ஹெல உறுமய பாராளுமனற உறுப்பினர்கள் ஜெனீவாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் கட்டாய மதமாற்றத்திற்கு எதிரான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்பித்துள்ளனர். இதனையடுத்து அந்தப் பிரேரணைக்கு எதிராக பல்வேறு அமைப்புக்கள் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தன.

அதேநேரம் ஜாதிக ஹெல உறுமயவும் தமது பிரேரணைக்கு சட்டஅங்கீகாரம் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இதன் அடிப்படையில் உயர் நீதிமன்றம் தமது இரகசிய தீர்ப்பை தற்சமயம் சனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அறிவித்துள்ளது. இதனையடுத்து சபாநாயகர் உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது வெளிப்படுத்தவுள்ளார்.

இதற்கிடையில் இந்த கட்டாய மதமாற்ற பிரேரணை அடிப்படை உரிமை மீறல்எனக்கூறி பிரேரணைக்கு எதிரான சில அமைப்புகள் சர்வதேச மனித உரிமைக்ள் நிறுவனத்திடம் முறைப்பாட்டை செய்துள்ளன.

ணவே அந்த முறைப்பாட்டுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே தாம் ஜெனீவா சென்று மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் தமது நியாயத்தை தெளிவுபடுத்தப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

# இலங்கையின் சில்லறை நாணயங்களை அச்சிட மேயர்மின்ட் நிறுவனம் விருப்பம்

இலங்கையில் சில்லறை நாணயங்களை அச்சிடக்கூடிய இடம் ஒன்றை பெற்றுத்தருமாறு வெளிநாட்டு நிறுவனம் விடுத்த கோரிக்கையை மத்திய வங்கியின் ஆளுநரும், நிதி அமைச்சரும் நிராகரித்துள்ளனர். ஏற்கனவே ரோயல் மின்ட் என்ற நிறுவனமே இலங்கைக்கான சில்லறை நாணயங்களை அச்சிட்டு வருகிறது. இது இலங்கையுடன் சுமார் 500 வருட சம்பந்தத்தை கொண்டுள்ளது. இந்த நிலையி லேயே புதிதாக மேயர் மின்ட் என்ற நிறுவனம் தாம் இலங்கை யின் நாணயங்களை அச்சிட விருப்பம் கொண்டுள்ளத்தாகவும்; அதற்காக நிதி அமைச்சரையும், மத்திய வங்கி ஆளுநர் சுனில் மென்டிஸையும் சந்திக்க வேண்டு மெனவும் கோரிக்கையை முன்வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருட்களுக்கான விலை உயர்வை அரசால் தடுக்க முடியாதாம்

### -அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்.

(கொழும்பு)

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பால் பொருட் களின் விலைகள் அதிகரிக்கும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். விலை அதிகரிப்பை அரசாங்கத்தால் தடுக்க முடியாது. இந்தச்சுமையை பொது மக்களும் கொஞ்சக் காலத்திற்கு சுமக்க வேண்டி வருமென அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தின் வியாபாரநிலையங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குக!

## யாழ். மக்களுக்கு த.தே. விழிப்புணர்வுக்கழகம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் வியாபார நிலையங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் கேட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, குடாநாட்டு மக்களே! இராணுவத்தினரின் வியாபார நிலையங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். யுத்தநிறுத்தம் செய்யப்பட்டு சமாதான சூழல் தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் சிறிலங்கா இராணுவம் சமாதான சூழலைக் குழப்பும் நோக்கில் பல்வேறுபட்ட செயற்பாடுகளைச் செய்துவருகின்றது. வெளிநாடுகளில் இருந்து இராணுவ உதவிகளைப் பெறுவதும், இராணுவ புலனாய்வுத் துறைக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதுமாக தமது செயற்பாட்டை செய்து வருகின்றது. அதுமட்டுமன்றி தமிழர் கலாசாரத்தை சீரழிக்கும் நோக்குடன் இன்று யாழ்.இராணுவநிலையங்களுக்கு அண்மையில் வர்த்தக நிலையங்களை நிறுவி குறிப்பாக மாலை நேரங்களில் உணவு விநியோகங்களை மேற்கொள்வதன் ஊடாக மக்களை அவ்விடத்திற்கு வரவழைத்து தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தினை வேறு வடிவத்தில் இன்று மேற்கொண்டு வருகின்றது. அதாவது அவ்விடங்களில் பொருட்களை மலிவான முறையில் விற்பனை செய்வதன் ஊடாக மக்களைக் கவர்ந்திழுத்து கலாசாரத்தைச் சீரழிக்கக்கூடிய போதைப்பொருட்கள் மற்றும் நீலப்படங்கள் என்பனவற்றை இலவசமாக அவ்விடங்களில் வைத்து வழங்கி வருகின்றது. எமது மக்களின் போராட்ட உணர்வைத் திசைதிருப்பும் நோக்கோடு திட்டமிட்டு இராணுவப் புலனாய்வுத்துறையினரால் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே எமது மக்கள் இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (36)

## —எதென்ஸ் ஒலிம்பிக் 2004— பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 5 | 1 | 1 | 7 |
| அவுஸ்திரேலியா | 4 | 1 | 3 | 8 |
| ஜப்பான் | 4 | 1 | - | 5 |
| இத்தாலி | 2 | 1 | - | 3 |
| உக்ரேன் | 2 | - | 1 | 3 |
| அமெரிக்கா | 1 | 4 | 3 | 8 |
| ரஷ்யா | 1 | 3 | 2 | 6 |
| பிரான்ஸ் | 1 | 2 | 2 | 5 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | - | - | 1 |
| துருக்கி | 1 | - | - | 1 |
| போலந்து | - | 2 | - | 2 |
| நெதர்லாந்து | - | 1 | 2 | 3 |
| ஜேர்மனி | - | 1 | 1 | 2 |
| ஜோர்ஜியா | - | 1 | 0 | 1 |
| கிறீட்பிரிட்டன் | - | 1 | - | 1 |
| இந்தோனேசியா | - | 1 | - | 1 |
| போர்த்துக்கல் | - | 1 | - | 1 |
| சொர்பியா (மெண்டனக்) | - | 1 | - | 1 |
| சுலோவாக்கியா | - | 1 | 0 | 1 |
| பெல்ஜியம் | - | - | 2 | 2 |
| பல்கேரியா | - | - | 2 | 2 |

பொதுசன நூலகம் AUG 2004 மாநகர சபை யாழ்ப்பாணம்

## சமாதானத்திற்கு தடையாக இருப்பது ஜே.வி.பி.தான் என்கிறார் அமைச்சர் ஜயரத்ன

(கொழும்பு)

சமாதானத்திற்கான ஒரே தடையாக ஜே.வி.பி யே உள்ளதென சிறிலங்காவின் தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சர் தி.மு. ஜயரத்ன கூறியுள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு செவ்வியளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்.

"மார்க்சிசத்தைச் சேர்த்துக்கொண்டு விட்டுக் கொடுப்பிற்கு இயலாத நிலையில் ஜே.வி.பி சமாதான நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கிற்கென ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. 2000 ஆம் ஆண்டில் அக்கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறையிலேயே தற்போது இடைக்கால நிர்வாகம் புதிய வடிவத்துடன் வந்துள்ளது. அநேக கட்சிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை எத்தகையது என்பது குறித்து உண்மையான புரிந்துணர்வு இன்றி அதனை எதிர்த்து வருகின்றன" என்றும் தெரிவித்துள்ளார்.

### பதவிநீக்கம்

பிரதமர் மகிந்த இராஜபக்ஷ தனது ஊடகத்துறை செயலரைப் பதவிநீக்கம் செய்துள்ளார்.

எதென்சிலிருந்து நாடு திரும்பிய அவர் இந்த பணிப்புரையை வழங்குகியுள்ளார். புதிய ஊடகத்துறைச் செயலாளராக சந்திரபால லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆயர்குழு....

எந்தவகையில் முன்னெடுத்துச் செல்லலாம். இதற்கு ஏதாவது தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யலாமாவென்று கலந்தாலோசிப்பதற்காக இந்த உரையாடல் இடம்பெற்றது.

அவர் ஒரு சேனாதிபதியாக இருக்கின்றதனால் பிறநாட்டுத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு உள்ளதன் காரணத்தால் அவர்களைச் சந்திக்கும் நேரத்தில் இலங்கை அரசுத் தலைவர்களுக்கு அழுத்தங்கொடுத்து தளர்ந்து போயிருக்கின்ற பேச்சுவார்த்தை மீண்டும் உயிர்பெற்று அதனை முன்னெடுத்துப் போவதற்குத் தன்னால் ஆன முயற்சிகளை எடுப்பதாக அவர் கூறியிருக்கின்றார். அதனை அரசியல்துறைப் பொறுப்பாளருக்கு இச்சந்திப்பின்போது தெரியப்படுத்தியுள்ளோம்.

***கேள்வி:– கலந்துரையாடல் குறித்துத் தங்களது கருத்தினைத் தெரிவிக்க முடியுமா?***

பேச்சுவார்த்தை தடங்கலாக இருக்கின்ற இந்த நேரத்தில் இப்படியான முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. ஏனென்று சொன்னால் மக்கள் எல்லோரும் பயத்துடனும் அச்சத்துடனும் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோனால் எவ்வளவோ பின்விளைவு ஏற்படும் என்று கலங்கிக்கொண்டிருக்கும் பொழுது, இப்படியான பெரியவர் கள் தங்களது முயற்சிகளை எடுக்க முன்வந்து அதற்காக உழைக்கும் பொழுது சமாதானம் கிடைக்கும் என்று எமக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது என்றார். (சோ,கு)

### நாட்டின்....

வங்கி கேட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமைகுறித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள இந்த அறிக்கை உலகவங்கியால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனித்தனியே அனுப்பப்படுவது இதுவே முதல்தடவையாகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் தெளிவுக்காகவே இவ்வறிக்கை பா.உ.களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இலங்கையின் சமாதான முயற்சியின் தற்போதைய நிலை, இலங்கையின் பொருளாதார நிலை, அதனை மேம்படுத்த உலக வங்கி மேற்கொண்டுள்ள முனைப்புகள் என்பன இதில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

### பொலிஸ்....

கட்சி தீர்மானம் எடுத்துள்ளது. முன்னைய அமைச்சர் அப்துல காதர் கைது செய்யப்பட்டமை பாராளுமன்ற விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட செயல் என ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டியும் உள்ளது.

### அரசியல்....

துள்ளோம். யுத்தநிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல் செய்வதன்மூலம் சமாதானத்தின் பலாபலன்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும். அவர்களுடைய வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு இடைக்கால தன்னாட்சி அதிகார நிர்வாகக் கட்டமைப்பு பெரிதும் உதவுவதுடன், மீள் குடியேற்றம் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும், சமாதான முயற்சிகளையும் அது பெரிதும் ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### தேசியக்கொடி....

செயற்பாட்டில் சிறிலங்கா கடற்படை ஈடுபட்டது.கொடியேற்ற முற்பட்ட போது அங்கு வந்த கடற்படையினர் கொடியேற்ற முடியாது என்று தெரிவித்தனர். அதன் போது அங்கு திரண்டிருந்த மக்கள் எங்கள் நிகழ்வுகளுக்கு எங்கள் தேசியக்கொடியை ஏற்றுவதே வழமை. இது தொடர்பில் சந்தேகங்கள் இருப்பின் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறி கடற்படையினரைத் திருப்பி அனுப்பினர். பின்னர். தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு போர் நிறுத்தக் கண்காணிப்பக் குழுவுடன் வந்த படையினர் நிகழ்வைப் பார்த்துவிட்டுச்சென்றனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரை நிகழ்த்தினார்.


## சாவு அறிவித்தல்

### தர்மலிங்கம் பார்த்தீபன்

**வவா வீதி, நாச்சிக்குடா.**

இணுவில் கிழக்கை ·பிறப்பிடமாகக்கொண்டவரும்,வவாவீதி நாச்சிக்குடாவை வசிப்பிடமாகக்கொண்டவருமாகிய தர்மலிங்கம் பார்த்தீபன் (வர்த்தகர் நாச்சிக்குடா சந்தை) 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார் இவர் தர்மலிங்கம்,இரத்தினாம்பாளின் அன்பு மகனும்; பிரதீபன், பிரியதர்சினி, மாவீரர் செந்தமிழ்-ஜெகதீபன், சயந்தி செஞ்சுடர், போராளி அர்ச்சனா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16.08.2004 திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக 19ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
**மு. ராசன்**
**(சகோதரன்)**
**முழங்காவில்.**

(சி-10073)


## இராணுவம்-இளைஞர்குழு தெல்லிப்பளையில் முறுகல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பளைப் பகுதியில் இளைஞர் குழு ஒன்றிற்கும் இராணுவத்தினர் சிலருக்குமிடையே நேற்று பெரும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்வதற்காகவேண்டி தெல்லிப்பளைப் பகுதியில் உள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியூடாகச் சென்று கொண்டிருந்த மேற்படி இளைஞர் குழுவை வழமைக்கு மாறாக இராணுவச் சிப்பாய்கள் சிலர் வீடியோப்படம் பிடிக்க முற்பட்டுள்ளனர்.இதனைக் கண்டு பதற்றமடைந்த இளைஞர்கள் தம்மை வீடியோப்படம் பிடிக்க வேண்டாம் எனவும், தம்மை வீடியோ படம்பிடிக்கக் காரணம் என்ன என்பதையும் இராணுவத்தினரிடம் விசாரித்ததால் இருதரப்பினரிடையேயும் பெரும் வாக்கு வாதமும், முறுகல் நிலையும் உருவானது.

இதனால் ஏற்பட்ட பரபரப்புச் சூழ்நிலையை அடுத்து அப்பகுதியில் மக்கள் குழுமத்தொடங்கவே இராணுவச் சிப்பாய்கள் அங்கிருந்து நழுவிச் சென்றுவிட்டனர்.

மக்களைப் பீதி கொள்ளவைக்கும் விதமாக படைச் சிப்பாய்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் குறித்து சம்பவத்தை நேரில் கண்டோர் தம் கடும் ஆட்சேபங்களை வெள்யிட்டுள்ளனர். (33)

### திரு....

சம்பவ இடத்திற்கு சென்று படையினருடன் வாக்குவாதபபட்டு போராளிகளை மீட்டு வந்துள்ளார்.இதனையடுத்து போர்நிறுத்த கண்காகணிப்பு குழுவுக்கு அவர் தெரிவித்துள்ள முறைப்பாட்டில் படையினருக்கு போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக உரிய தெளிவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

### வட....

களில் வாழும் தமிழர்களின் நிலை என்ன என்பதை எவரும் எண்ணவில்லை எனவும் அதேபோல முஸ்லிம் காங்கிரசின் தலைவர் இடைக்கால நிர்வாகத்தை ஆதரிப்பதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள முஸ்லிம்களின் நிலையை அவர் எண்ணிப்பார்க்கவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். எனவே தமது கட்சி ஒரு போதும் நாடு பிளவுபடுவதை அனுமதிக்கப்போவதில்லை என அவர்மேலும் தெரிவித்தார்

### 20இலட்....

களில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை மழைவீழ்ச்சி ஏற்படாதென காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.தற்பொழுது ஏற்பட்டுள்ள தென்மேல் பருவக்காற்று ஒக்ரோபர் மாதம் வரை நீடிப்பதால் மழைவீழ்ச்சி ஏற்படாதெனவும், தென்மேல் பருவக்காற்று நின்று வடமேல் பருவக்காற்று ஆரம்பமாகிய பின்பே மழை வீழ்ச்சி ஏற்படும் எனவும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.


**தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுமதியுடன்**
**வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும்**

## கால்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

மேற்படி சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவற்றையும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுக்கட்டணம் 300/= செலுத்தி கட்சன் வீதியில் உள்ள இராசன் எரிபொருள் வாணிபத்தில் ஒப்படைத்து உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**நிர்வாகம்:-**
**"லக்கி ஸ்ரார்" வி.கழகம்**

(4963)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.